Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 13

வியாழக்கிழமை
09 டிசெம்பர் 2021

கார்த்திகை 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 757
மொத்தம் 569,928

**உயிரிழப்பு**
நேற்று 28
மொத்தம் 14,533

**குணமடைவு**
543,467

# பன்மடங்கு தொற்றாளர்கள் இன்னும் இலங்கையில்!

## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அதிர்ச்சித் தகவல்



கொழும்பு, டிசெம்பர் 9
நாளாந்தம் அறிவிக்கப்படும் தொற்றாளர் எண்ணிக்கையைவிட பன் மடங்கு தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ளனர். எனவே, ஒவ்வொருவரும் சுகாதாரக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்தே ஆகவேண்டும். அவ்வாறில்லையெனில், பண்டிகைகளை தனிமைப்படுத்தல் நிலையங்களில் அல்லது கொரோனா சிகிச்சை நிலையங்களிலேயே கொண்டாட வேண்டியேற்படும். - இவ்வாறு, இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார். 15 ▶

## இயக்கச்சியில் இளைஞனின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 9
பளைபொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சி - முகாவில் பகுதியில் வீடு 15 ▶

## இளம்பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 9
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை - வசந்தபுரம் பகுதியில் இளம் பெண் ஒருவர் 15 ▶

## முன்னாள் போராளிகள் பிச்சையெடுக்கும் நிலை!

### வாக்குறுதியை நிறைவேற்றுமாறு செல்வம் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 9
"புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு உரிய வசதிகளை அரசு செய்துகொடுக்கவில்லை. இதனால் பலரும் கையேந்தி பிச்சையெடுக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது." - என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடா 15 ▶

## மன்னாரில் ஒரே நாளில் 46 பேருக்குக் கொரோனா

### சிறுவர் இல்லத்தில் 29 பேருக்கு

தலைமன்னார், டிசெ. 9
மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 46 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 29 பேர், மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து பாடசாலைகளுக்கு, பல்கலைக்கழகங்களுக்கு சென்றுவரும் மாணவர்கள் - என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் 15 ▶

## சிலிண்டர் வெடிப்புகள்: இதுவரை 458!

### சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 9
அண்மைய நாள்களில் 458க்கும் மேற்பட்ட எரிவாயு 15 ▶

## விபத்தில் காயமடைந்த ஆசிரியர் உயிரிழப்பு



கொடிகாமம், டிசெ. 9
மீசாலை, புத்தூர்ச்சந்தியில், இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த ஆசிரியர் 15 ▶

## சிலிண்டர்களை மீளப்பெறுகிறது லிட்றோ நிறுவனம்

கொழும்பு, டிசெ. 9
டிசெம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னதாக வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்க 15 ▶

## பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு நாளை!

கொழும்பு, டிசெ. 9
2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான (இறுதி) வாக்கெடுப்பு நாளை வெள்ளிக்கிழமை மாலை நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. 15 ▶

## காரைநகர் பாதீடு தோற்கடிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 9
காரைநகர் பிரதேசசபையின் பாதீடு மேலதிக ஒரு வாக்கால் தோற்கடிக்கப்பட்டது. காரைநகர் தவிசாளர் விஜயதர்மா 15 ▶

**முச்சந்தி முரளி**



"அப்ப இந்தமுறை புதுவருசத்துக்கு பட்டாசு சத்தங்களை விட சிலிண்டர் வெடியோசைதான் கூடவா இருக்கும் போல"

## கல் வீழ்ந்து சிறுவன் சாவு



யாழ்ப்பாணம், டிசெ. 9
தொல்புரம் மத்தி பகுதியில், சிறுவன் மீது கல்வீழ்ந்ததால், காயமடைந்த சிறுவன் 15 ▶



இந்தியாவில்

## ஹெலி வீழ்ந்து நொருங்கியதில் முப்படைத் தளபதி உயிரிழப்பு!

### விபத்தா? தீவிரவாதிகளின் தாக்குதலா? விசாரணைகள் தீவிரம்





புதுடெல்லி, டிசெ.9
இந்தியாவின் முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத் மற்றும் அவரது 15 ▶

செலான் வங்கியில்
தங்கப்பவுணுக்கு அதிகபட்ச முற்பணத்தொகை
ரூ. 87 000/=
குறைந்த வட்டி வீதத்தில்
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது 0779811456 ஐ அழையுங்கள்
யாழ்ப்பாணம், நெல்லியடி மற்றும் வவுனியா கிளைகளில் சனிக்கிழமைகளிலும் தங்கக்கடன் சேவை இடம்பெறும்
செலான் தங்கக்கடன்
Brand Finance Rating "A+" Fitch Rating: "A"(lka)' PQ
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டக்ளஸுக்கு எதிராக கண்டனத் தீர்மானம்!

யாழ்ப்பாணம், டிசெ. 9
விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்த நிலையில், அவரது கருத்துக்கு எதிராக கரைச்சி பிரதேச சபையில் நேற்று கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
கறுப்புக்கொடி காட்டப்பட்டு இந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
குறித்த பிரேரணைக்கு பல கட்சி சார்ந்தவர்களும் ஆதரவளித்திருந்தனர். அமைச்சர் தனது வார்த்தைக்கு மக்கள் முன்னிலையில் பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். (ம-113)

# வெளிப்பொறிமுறையை நாடு ஒருபோதும் ஏற்காது

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 9
பலமான உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் வலுவாக முன்னோக்கிச் செல்லும் இந்தவேளையில், இலங்கை எந்தவொரு வெளிப் பொறிமுறையையும் ஏற்றுக்கொள்ளாது என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளியுறவு மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைச்சர் ஷக் அப்துல்லா அல்நஹ்யான் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோருக்கிடையில் அபுதாபியில் நடைபெற்ற சந்திப்பின்போதே பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.
ஐந்தாவது இந்து சமுத்திர மாநாட்டின் பக்க அம்சமாக, இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள இலங்கையர்களுக்கு அதிகமான தொழில் வாய்ப்புக்களை வழங்குவது குறித்து இரு அமைச்சர்களும் வலியுறுத்தினர்.
எரிசக்தி பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பு, ஐக்கிய அரபு இராச்சியத்தின் நிறுவணங்கள் இலங்கையில் முதலீடுகளை மேம்படுத்துதல் மற்றும் சர்வதேச அரங்குகளில் இணைந்து பணியாற்றுதல் ஆகியன குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.
இரு நாடுகளுக்குமிடையிலான உயர்மட்ட பயணங்களின் மூலமாக நட்புறவை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தினார். அத்துடன், அடுத்த வருடம் இலங்கைக்கு பயணம் செய்ய உள்ளேன் என்றும் குறிப்பிட்டார். பலதரப்பு மன்றங்களிலும் குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் ஐக்கிய அரபு இராச்சியம் இலங்கைக்கு வழங்கும் ஆதரவை எப்போதும் மதிப்பதாகவும் பீரிஸ் தெரிவித்தார். (த-இ)

# மரக்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது

வவுனியா, டிசெ. 9
சட்டவிரோதமான முறையில் காட்டை அழித்து, முதிரை மரக்குற்றிகளைக் கடத்திய நபரொருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின்போது, குறித்தநபர் வவுனியாவில் தொடர்ச்சியாக காடழிப்பில் ஈடுபட்டு வந்துள்ளமையை ஏற்றுக்கொண்டார். சுமார் இரண்டு ஏக்கர் நிலப் பரப்பில் இருந்த முதிரை மரங்கள் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-110)

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ.9
யாழ். மாநகரசபையின், வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி, நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.
நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நாவாந்துறை கிராம அலுவலர் அலுவலகத்தில் இந்தச் சேவை நடைபெறவுள்ளது. இந்த நடமாடும் சேவையில், வட்டாரம் 1,18,19,20,21 மற்றும் ஏனைய வட்டாரங்களுக்கான பெயர்மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல், துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்கல், ஆதனவரி அறிவித்தல், மற்றும் அவை தொடர்புபட்ட ஆலோசனைகள் வழங்கப்படும். (ஒ-ரி)

## வட்டுக்கோட்டையில் திருவெம்பாவை

யாழ்ப்பாணம், டிசெ. 9
வட்டுக்கோட்டைதெக்கணப்பாய் கண்ணாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கோவில் கண்ணகியம்மன் கோவில்களின் திருவெம்பாவை உற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை அதிகாலை 4மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகிறது.
எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 4மணிக்கு நடேசர் அபிஷேக ஆருத்திரா தரிசன நிகழ்வு நடைபெற்று, தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வந்து, கோவில் பித்தர் கேணியில் தீர்த்த உற்சவம் நடைபெறும். அத்துடன் 10 தினங்களும் திருவாதவூரடிகள் படிப்பும் நடைபெறும் என்று கோவில் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (து)

# யுகதனவி ஒப்பந்தத்தை சபையில் முன்வைக்கவும்

## எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 9
கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தை உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.
இதன்போது ஒழுங்கு பிரச்சினையொன்றை எழுப்பிய ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, இது விடயம் தொடர்பில் அமெரிக்க நிறுவனத்துக்கும், திறைசேரி செயலாளருக்கும் இடையில் இணக்கப்பாட்டுக்கு வரப்பட்டுள்ள உடன்படிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு இற்றைக்கு ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் நான் கோரிக்கை விடுத்திருந்தேன். அப்போது 'அடுத்தவாரம் சமர்ப்பிக்கப்படும்' என மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே உறுதியளித்தார். தற்போது ஆறு வாரங்கள் கடந்துவிட்டன. இன்னும் குறித்த உடன்படிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.
இது நிதி அமைச்சுடன் தொடர்புபட்டுள்ள விடயம். 10ஆம் திகதி நிதி அமைச்சு தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளது. எமது நாட்டு தேசிய வளம் தொடர்பில் திறைசேரி செயலாளர், அமெரிக்க நிறுவனமொன்றுடன் உடன்பாட்டுக்கு வருவாரெனில் அது பற்றி நாம் கட்டாயம் அறிந்துகொள்ள வேண்டும். ஒப்பந்தங்களில் குறைபாடுகள் இருப்பின் அவற்றை சுட்டிக்காட்ட வேண்டும். அதேபோல குறித்த ஒப்பந்தத்தை இரண்டு வருடங்களுக்கு சமூகமயப்படுத்தப்படக்கூடாது என்ற சரத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. இது உண்மையா என்பதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நிதி அமைச்சரால் தன்னிச்சையாக செயற்பட முடியாது. நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டும். இது விடயம் தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ம-44)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ரயில் மோதிச் சாவு!

கொழும்பு, டிசெ. 9
பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த உடரட மெனிக்கே ரயிலில் மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் அவர்களின் மகன் ஆகியோர் உயிரிழந்துள்ளனர் என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.
திம்புளை - பத்தனை போகாவத்தை பகுதியில் புதிய வீடமைப்பு திட்டத்தில் வசித்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.
சம்பவத்தில், எஸ்.பிரான்சிஸ் (வயது- 70) (தந்தை), பி.கமலாவதி (வயது- 65) (தாய்), பிரான்சிஸ் குமார்ராஜ் (வயது- 40) (மகன்) ஆகியோரே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மூவரும் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்களா? அல்லது ரயிலில் அடிபட்டு உயிரிழந்தனரா? என்பது தொடர்பில் வட்டவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
உயிரிழந்த மூவரின் சடலங்களும் அதே ரயிலில் நாவலப்பிட்டி ரயில் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, நாவலப்பிட்டி பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
உயிரிழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் கடந்த 10 நாள்களுக்கு முன்னர் தமது வீட்டை பூட்டிவிட்டு வெளியேறியுள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.
இதேவேளை- கடனாளிகளிடமிருந்து தப்பிக்க உயிரிழந்த மகன், தந்தை மற்றும் தாயுடன் ரயிலில் பாய்ந்து தற்கொலைசெய்து கொண்டிருக்கலாம் என பிரதேசவாசிகள் கூறுகின்றனர்.
அதேபோல் உயிரிழந்த மகனுக்கு எதிராக பிரதேசமக்கள் பண மோசடி தொடர்பில் திம்புளை பத்தனை பொலிஸில் பலமுறைப்பாடுகளை யும் செய்துள்ளனர். அதேபோல் கடன் கொடுத்தவர்களில் பலர் அவரைத்தேடி பலமுறை அவர் வசித்த வீட்டுக்குச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற அமைதியின்மை: விசாரிப்பதற்காக சிறப்புக்குழு

## *11 எம்.பிக்களை உள்ளடக்கி அமைந்தது*

**கொழும்பு, டிசெ. 9**

**டிசெம்பர் 3 மற்றும் 4ஆம் திகதிகளில் சபைக்குள்ளும் நாடாளுமன்ற வளாகத்திலும் இடம்பெற்ற கைகலப்பு உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக பிரதி சபாநாயகர் தலைமையில் 11 எம்.பிக்கள் அடங்கிய விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.**

நாடாளுமன்றம் நேற்று காலை 9.30 மணிக்கு கூடியது. சபாநாயகர் அறிவிப்புவேளையின்போதே இது தொடர்பான அறிவித்தலை சபாநாயகர், அவைக்குத் தெரியப்படுத்தினார். 'டிசெம்பர் 3, 4ஆம் திகதிகளில் சபாபீடத்துக்குள்ளும், நாடாளுமன்ற வளாகத்திலும் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி, அவை தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்காகவுமே இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது' என்று சபாநாயகர் அறிவித்தார்.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சிலம்பலாப்பிட்டிய தலைமையிலான இந்தக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ச, பந்துல குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, சுசில் பிரேமஜயந்த, கயந்த கருணாதிலக்க, ரவூப் ஹக்கீம், அநுரபிரியதர்சன யாப்பா, விஜித ஹேரத், ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் சுமந்திரன் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார டிசம்பர் 3ஆம் திகதி ஆற்றிய உரை தொடர்பில் அவரை அன்றைய தினம் சபைக்குள்ளும் மறுநாள் சபைக்கு வெளியிலும் வைத்து ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தாக்க முற்பட்டனர் என எதிரணி தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. சபாநாயகரை அச்சுறுத்தும் வகையிலும், போலியான கருத்துக்களை மனுஷ நாணயக்கார வெளியிடுகின்றார் என ஆளுந்தரப்பினரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். (ம-44)

## மோட்டார் குண்டொன்று புங்கன்குளத்தில் மீட்பு!




யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரியாலை - புங்கன்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து சிறிய ரக மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளரால் குப்பைகளை புதைப்பதற்காக கிடங்கு வெட்டப்பட்ட சமயத்திலே அதற்குள்ளிருந்து இந்தக் குண்டு மீட்கப்பட்டது. இதனையடுத்து தகவலறிந்து வந்த யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்று குண்டை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-20)

## இடைவிலகல் மாணவர்களை மீளவும் இணைக்கத் திட்டம்

*டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர்கள் முன்மாதிரி*



சாவகச்சேரி, டிசெ. 9

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு, இதுவரை காலமும் பாடசாலைக்கு வராத மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று, அவர்களை மீளவும் பாடசாலைக்கு அழைத்துவரும் நடவடிக்கை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர்கள் முன்னெடுத்துள்ளனர்.

கொரோனா அச்சம் காரணமாக பாடசாலைகள் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்ததால் மாணவர்கள் இடைவிலகும் சாத்தியம் அதிகம் உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது. இந்த நிலையிலேயே தமது பாடசாலைக்கு வருகைதராத மாணவர்களைச் சந்தித்து மீண்டும் அவர்களை கல்விச் சமூகத்துடன் இணைக்கும் நடவடிக்கையை டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர்கள் முன்னெடுத்து வருகின்றனர். (ம-9)

# மறவன்குளம் தூய்மைப்பணி நேற்று ஆரம்பித்து வைப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ். ஈச்சமோட்டை மறவன்குளம் புனரமைப்புப் பணிகள் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் விஸ்வ லிங்கம் மணிவண்ணன் தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனின் 'தூய நகரம்' திட்டத்துக்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் நிதியுதவியுடன் இந்தக் குளம் சீரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இந்த நிகழ்வில், குளத்தின் மாதிரி திட்ட வரைவும் மக்கள் பார்வைக்காக வெளியிட்டு வைக்கப்பட்டது.



மாநகர பிரதி முதல்வர் து.ஈசன், மாநகர ஆணையாளர் ஜெயசீலன், மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**நே**ற்று ஒரு குழந்தை, புதிசாக் கட்டிக் கொண்டிருக்கிற ஒரு கட்டடத்தில இருந்து கல்லு விழுந்ததில செத்ததை அறிஞ்சிருப்பியள். அந்தப் பிள்ளைக்கு காயம் வந்தவுடன பக்கத்தில இருந்த, முந்தி ஒருகாலத்தில பேமஸா இருந்த கூட்டுறவு ஆஸ்பத்திரிக்கு போன் பண்ணி அம்புலன்சுக்கு சொல்லி இருக்கினம். ஆனால் அங்க இருந்த அம்புலன்ஸ்க்கு ஒரு சில்லு இல்லை. அதால "அம்புலன்ஸை அனுப்ப ஏலாது. பிள்ளையைக் கொண்டு வாங்கோ" எண்டு சொல்லுப்பட்டிருக்கு. பிறகு ஏதோ ஒரு வாகனத்தில அங்க பிள்ளையைக் கொண்டு போனால், கொஞ்ச நேரம் சோதிச்சுப் போட்டு, "எங்களால ஏலாது, பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போங்கோ" எண்டு சொல்லியிருக்கினம். பிறகு குழந்தையைத் தூக்கிக்கொண்டு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போச்சினம். அங்க "பிள்ளை செத்திட்டு. அந்த ஆஸ்பத்திரிக்கு கொண்டு போன நேரம் இஞ்ச கொண்டந்து இருந்தால் காப்பாத்தி இருக்கலாம்" எண்டு டாக்குத்தர்மார் சொல்ல, பெத்தவைக்கு பெரும் கவலை.

அங்க இங்க எண்டு அலைஞ்சு திரிஞ்சு நேரத்தை வீணாக்காமல் பெரியாஸ்பத்திரிக்கே பிள்ளையைக் கொண்டு போயிருந்தால் இப்பிடி சோகம் வந்திருக்காதே எண்டு சொல்லிக் கதறுகினம். தனிய அவையள் மட்டும் இதுக்கு காரணமில்லை. ஒரு ஏரியாவில இருக்கிற ஒரு ஆஸ்பத்திரி (அது பிரவேட் எண்டாலும்கூட) தன்னை நம்பி இருக்கிற சனத்துக்கு சரியான சேவையை வழங்க எப்பவும் ரெடியா இருக்கோணும். ஆனால் "அம்புலன்ஸுக்கு சில்லுக் கழட்டி இருக்கு. அதால ஓடாது. ஏதும் வாகனம் பிடிச்சு வாங்கோ" எண்டு சொல்லுறது எந்தவகையில நியாயம்?

ஏதும் விபத்து எண்டால், காயப்பட்ட ஆக்களை வாடகைக்கு வாகனம் ஓடுறவை ஏத்தப் பஞ்சிப்படுவினம். 'நாளைக்கு அதால ஏதும் பொலிஸ் விசாரணை வரலாம், கோர்ட்டில ஏறி சாட்சி சொல்ல வேண்டி இருக்கலாம். எதுக்கு வீண் சோலி?' எண்டிட்டு , மாட்டன் எண்டிடுவினம். அதால அம்புலன்ஸ் சேவை ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும் கட்டாயம். அம்புலன்ஸ் இருந்தால் மட்டும் காணாது. எப்பவும் ஓடக்கூடிய கொண்டிசனிலயும் இருக்கோனும் . இல்லாட்டி நேற்று அந்த ஆஸ்பத்திரியில நிண்டமாதிரி, சில்லு இல்லாமல் அம்புலன்ஸ் இருக்கிறதும் ஒண்டுதான், இல்லாமல் இருக்கிறதும் ஒண்டுதானே?

அந்த அம்புலன்ஸ் மட்டும் வேலை செய்யக் கூடிய நிலையில இருந்து, அந்தப் பிள்ளையை வேளைக்கே ஏத்திக் கொண்டு முதல்ல தங்கட ஆஸ்பத்திரிக்கும் பிறகு பெரியாஸ்பத்திரிக்கும் கொண்டு போயிருந்தால் ஒருவேளை இந்தப் பரிதாபச்சாவைத் தடுத்திருக்கவும் முடிஞ்சிருக்குமெல்லோ? ஒரு சின்ன அலட்சியத்தால எவ்வளவு பெரிய இழப்பு? இதை வாசிச்சிட்டு, "அந்தப் பிள்ளை முதலே செத்திட்டுது. அதுக்கும் அம்புலன்ஸ் போகாததுக்கும் சம்பந்தமேயில்லை" எண்டு சிலர் வரிஞ்சுகட்டிக் கொண்டும் வரக்கூடும். ஆனால் ஒரு ஆபத்தான நிலையில அந்த இடத்துக்கு போக ஏலாமல், சில்லுக் கழட்டிப் போட்டு மூலையில கிடக்கிறதுக்கு பேர் அம்புலன்ஸ் இல்லையே. இனியாவது வெறும் கட்டடங்களைக் கட்டச் செலவழிக்கிற காசில, கொஞ்சத்தையேனும் இது மாதிரி சனத்துக்கு அவசியமான விசயங்களுக்கு பாவிக்கலாமே?



- பட்சி

# ஆலய உண்டியல் உடைத்து திருட்டு

முல்லைத்தீவு, டிசெ.9
வரலாற்றுச் சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் உண்டியல் நேற்று முன்தினம் உடைக்கப்பட்டு, பணம் திருடப்பட்டுள்ளது.
மணிக்கோபுரம் ஊடாக ஆலயத்துக்குள் இறங்கிய திருடன், ஆலய மண்டபத்தில் மூலவருக்கு நேராக வைக்கப்பட்ட உண்டியலை இரும்புக் கம்பியால் உடைத்து, அதிலிருந்த பணத்தைத் திருடியுள்ளான்.
ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் அந்தக்காட்சி பதிவாகியுள்ளது. சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.
(ஒ-4-19)

# கடுமையான பாதிப்புக்களை ஒமிக்ரோன் ஏற்படுத்தாது!

## உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 9

**உருமாறிய கொரோனா திரிபான ஒமிக்ரோன் தீவிர பாதிப்புக்களை உண்டாக்கவில்லை. மேலும், ஒமிக்ரோன் வைரஸ் தடுப்பூசிப் பாதுகாப்பை முழுமையாக உடைக்கும் சக்தி கொண்டதாகவும் இல்லை என உலக சுகாதார அமைப்பின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

உலக சுகாதார அமைப்பின் இரண்டாவது தலைமைப் பொறுப்பில் உள்ள மருத்துவர் மைக்கல் ரயான் என்பவரே இந்தக் கருத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
'ஒமிக்ரோன் பற்றி இன்னும் ஆழமாக அறிய வேண்டியதாக உள்ளது.
ஆனால், இதுவரை கிடைத்த முதற்கட்ட தகவலின்படி பார்க்கும்போது ஒமிக்ரோன் வைரஸ் டெல்டா உள்ளிட்ட மற்ற திரிபுகளைப்போல் மக்களை தீவிர நோய்க்குத் தள்ளவில்லை.
முதற்கட்டத் தகவல்கள் ஒமிக்ரோன் தீவிர பாதிப்பு ஏற்படுத்துகிறது என்பதை உறுதி செய்யவில்லை. இருந்தாலும் இது ஆரம்ப காலம்தான் என்பதால் நாம் மிகமிக அவதானமாக இருக்க வேண்டும். -என்றார்.
(ம)

# சபாநாயகர் மௌனம் காத்தால் உயர்நீதிமன்றத்தை நாடுவோம்!

## எதிர்க்கட்சி திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 9
சபாநாயகரே, இந்த சபைக்குள் நீங்கள் நேரில் கண்ட சம்பவங்கள் தொடர்பில் தீர்ப்பொன்றை அறிவியுங்கள். அவ்வாறு இல்லாவிட்டால் நாம் உயர்நீதிமன்றத்தை நாடுவோம் இவ்வாறு எதிரணிப் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல எம்.பி. தெரிவித்தார்.
நாடாளுமன்ற சிறப்புரிமை சட்டத்தின் பிரகாரம், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சபைக்குள்ளோ அல்லது தெரிவுக்குழுவிலோ தாக்குதல், திட்டமிட்ட அடிப்படையிலான இடையூறுகள் மற்றும் அவமதிப்பு இடம்பெற்றால் அவை உயர்நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்படக்கூடிய குற்றங்களாகும். எனவே, நேரில் கண்ட விடயங்கள் தொடர்பில் நீங்கள் தீர்ப்பொன்றை அறிவியுங்கள். இல்லையேல் இந்தப் பிரச்சினையை உயர்நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்ல நேரிடும்-என்றார்.
(ம-44)

# முல்லைத்தீவு மீனவர்களுக்கு நன்றி தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.9
முல்லைத்தீவுக் கடலில் மூழ்கி உயிரிழந்த வவுனியாவைச் சேர்ந்த மூன்று இளைஞர்களின் உடலங்களையும் மீட்டுக் கொடுத்த மீனவர்களுக்கு வவுனியா மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.
மின்பிறப்பாக்கி மூலம் மின் ஒளிபாய்ச்சி சடலங்களைத் தேடியவர்கள் மற்றும் படகுகளைக் கொடுத்து உதவியவர்களுக்கு கடமைப்பட்டுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.
(ஒ-4-19)



# சேர். பொன். இராமநாதனின் 91ஆவது குருபூசை தினம்!

யாழ்ப்பாணம், டிசெ. 9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகத்துக்கு அடித்தளமான பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும், சைவப் பெருவள்ளலாருமான சேர். பொன். இராமநாதனின் 91ஆவது குருபூசை நேற்றுக்காலை இடம்பெற்றது.
பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பல்கலைக் கழகத்தினுள் அமைந்துள்ள சேர். பொன். இராமநாதனின் உருவச் சிலைக்கும், சபா மண்டபத்தினுள் உள்ள உருவப் படத்துக்கும் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.
இந்த நிகழ்வில், சேர். பொன். இராமநாதன் அறக்கட்டளையின் சார்பில் பேராசிரியர் சி.சிற்றம்பலம் மற்றும் முன்னாள் துணைவேந்தரும், பேரவை உறுப்பினருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பதிவாளர் வி.காண்டீபன், இந்து கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த முன்னாள் துறைத்தலைவர் பேராசிரியர் எம்.வேதநாதன், முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.
(ம)

# 120 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், டிசெ.9
இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 120 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வு , நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்றது.
இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் திட்டத்தில் இணைக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா முதல் 500 ரூபா வரையான புலமைப் பரிசிலுக்கான காசோலைகள், சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.
யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சு.முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்திப்பணிப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.
(ஒ-ரி1)


# மரண அறிவித்தல்



**திருமதி வனிதா தனேந்திரன்**

யாழ்ப்பாணம் அராலி கிழக்கு அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் கோப்பாய் வீதி உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வனிதா தனேந்திரன் அவர்கள் கடந்த (07.12.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான திருஞானம் மகேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு சிரேஷ்ர புத்திரியும், காலஞ்சென்றவர்களான சின்னதுரை சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும், தனேந்திரன் (இந்தி-ஓய்வுநிலை நில அளவை உதவியாளர்) அவர்களின் அன்பு மனைவியாரும், பிரசாந்தா (MG Consultant RIDEP Project), திவ்வியா (Euro Home's Engineering Pvt.Ltd), துஷ்யா (Guru Printers, Thirunelvely) அவர்களின் பாசமிகு தாயாரும், ராகுலன் (Cooperative Insurance) அவர்களின் அன்பு மாமியாரும், கருணிகாவின் பாசமிகு பேர்த்தியும், விஜயா (Germany), வதனா (குஞ்சு-Germany), வசந்தா (பவா-Germany), வனஜா (ராசன்-Swiss) அவர்களின் பாசமிகு சகோதரியும் யோகேந்திரன், நற்குணராஜா, இரவீந்திரதாசன், சிவகுமாரன் அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இளங்காடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக கொண்டு செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 629 1102

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீசப்படும் பேனைகளால் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு

*விரைவில் விசேட வேலைத்திட்டம்*

கொழும்பு,டிசெ.9

பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களில் பயன்படுத்திய பின்னர் வீசப்படும் பேனைகளால், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்க விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் சுற்றாடல் அமைச்சு உள்ளிட்ட அமைச்சுகள் மீதான திருத்தங்கள் தொடர்பான தெளிவுபடுத்தலின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இதுவரையில் எவரும் அவதானம் செலுத்தாத விடயமாக பாவித்த பேனைகள் தொடர்பான பிரச்சினைகள் உள்ளன. அலுவலகங்களில் இதற்காக வேறான பெட்டிகளைப் பயன்படுத்தி அவற்றைப் பெற்று, மீள் சுழற்சி செய்யவும், பாதுகாப்பான முறையில் அவற்றை அழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக பாடசாலைகளில் மாத்திரம் 90 முதல் 100 கிலோ வரையான பேனைகள் சுற்றுச் சூழலுக்குள் போடப்படுகின்றன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இவை அழிவடைய 100 முதல் 400 வருடங்களாகும். இவை நிலத்துக்குள்ளேயே செல்லும். - என்றார். (ஒ-4)

## இலங்கையில்

# கடன் நெருக்கடியால் 200 பெண்கள் சாவு!

## ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டு

**கொழும்பு,டிசெ.9**

**நிதி நிறுவனங்களிடம் இருந்து கடன்பெற்று வட்டி செலுத்த முடியாமல் 200 க்கும் மேற்பட்ட இலங்கைப் பெண்கள் உயிரை மாய்த்துள்ளனர் - என்று ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.**

இலங்கையில் கிராமப் புறப் பெண்களின் உயிரைப் பறிக்கும் நுண் கடன் திட்டம் தொடர்பில் ஐ.நாவின் விசேட தூதுவரால் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடனுக்கு அதிக வட்டி வீதங்கள் வசூலிக்கப்படுவதால் பல பெண்கள் கடனுக்கு இரையாகின்றனர். இதன் விளைவாக, கடந்த சில ஆண்டுகளில் 200 க்கும் மேற்பட்ட பெண்கள் உயிரை மாய்த்துள்ளனர். நுண்கடன் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் அரசு இதுவரை எந்தவொரு பயனுள்ள அல்லது சரியான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று ஐ.நா. வின் சிறப்பு அறிக்கையாளர் பொமோயா ஒபோகடா தெரிவித்தார். தனது பரிந்துரைகளை, இலங்கை அரசு கவனத்தில் எடுத்துள்ளது. கடன் வழங்கும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டமியற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - உறுதியளித்தனரென - ஒபோகடா தெரிவித்தார். (ஒ-4)

## விழிப்புணர்வு



பெண்கள், சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு கிளிநொச்சி, பூநகரி - சின்னப்பல்லவ ராயன்கட்டு கிராமத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யு.எஸ்.ஏ.ஐ.டி. நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விழிப்புணர்வுக் கருத்தமர்வில் பெண்கள், சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டு, அதிலிருந்து எவ்வாறு மீள்வது என்பது தொடர்பான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. (ஒ-ரி1-13)

## எக்ஸ்பிரஸ் கப்பல் விபத்து: 13,832 மீனவர்களுக்கு இழப்பீடு

கொழம்பு,டிசெ.9

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தால், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள 13 ஆயிரத்து 832 மீனவர்களுக்கு முதற்கட்டமாக இழப்பீடு வழங்கப்பட்டது என்று கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார் (ஒ-4)

# தோள்பட்டையில் சிக்கிய இரும்புக் கொக்கி அகற்றல்

*மருத்துவர்களால் அபூர்வ சிகிச்சை*

கொழும்பு,டிசெ.9

பெண் ஒருவரின் இடது கை தோள்பட்டை வழியாக ஊடுருவிய மீன் பிடிக்கப் பயன்படுத்தும் 5 அடி நீளமான இரும்புக் கொக்கி வெற்றிகரமாக அகற்றப்பட்டுள்ளது.

காலி கராப்பிட்டிய போதனா மருத்துவமனையின் சத்திர சிகிச்சை பிரிவின் துறைசார் நிபுணர்களான ரசிக பத்திரன மற்றும் பாலித படடுவ ஆகியோரால் கொக்கி அகற்றப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டவர் ரத்கம, மொரொய்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணின் கணவர் மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படும் இரும்புக் கொக்கியால் பெண்ணைத் தாக்கியுள்ளார். அதன்போதே அந்தக் கொக்கி அவரின் தோள்ப்பட்டையில் சிக்கியது. அதனையடுத்து அவர் கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன்போது மருத்துவர்கள் இருவரால் ஒன்றரை மணித்தியால சத்திர சிகிச்சையின் பின்னர் 5 அடி நீளமான இரும்புக் கொக்கி அகற்றப்பட்டது. தற்போது அந்தப் பெண் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் உள்ளார். அதிர்ஷ்டவசமாக பெண்ணின் கை நரம்பு அல்லது எலும்புக்குச் சேதம் ஏற்படாத வகையில் 5 அடி நீளமான கொக்கி இறங்கியுள்ளது. இதனால் உயிருக்கு ஆபத்தின்றி அந்தப் பெண் காப்பாற்றப்பட்டுள்ளார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4)


**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை**

**இயக்கச்சி சந்தை வளாக கடைகள் நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2022**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 09.12.2021 தொடக்கம் 23.12.2021 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரம்)

கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 23.12.2021 பிற்பகல் 2.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 23.12.2021 பிற்பகல் 2.00 மணி

கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | VS – 04 | 75,000.00 | 7,500.00 | 2,000.00 |
| 02 | PS – 04 | 150,000.00 | 15,000.00 | 2,000.00 |
| 03 | PS – 06 | 120,000.00 | 12,000.00 | 2,000.00 |
| 04 | PS – 07 | 120,000.00 | 12,000.00 | 2,000.00 |
| 05 | PS – 08 | 105,000.00 | 10,500.00 | 2,000.00 |
| 06 | PS – 10 | 105,000.00 | 10,500.00 | 2,000.00 |
| 07 | PS – 11 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 08 | PS – 12 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 09 | PS - 13 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 10 | PS - 14 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |

**நியந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 23.12.2021 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும் குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி, பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும் தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
06. கேள்வி சித்திதாரராக தெரிவுசெய்யப்படுவோர் கேள்வித்தொகையினை முழுமையாகச் செலுத்திய பற்றுச்சீட்டினை பெற்றுக் கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகெள்ளவேண்டும்
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. சித்திகரகுத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்தவேண்டும்.
09. VS-04 கடை மரக்கறி மற்றும் பழ வியாபாரத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் த்லைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

09.12.2021

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை**

(CR 36173 ) (3 / 6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபைநிதி - 2021

01. சபைநிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்ட கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் பொருத்தமான தரத்தில் இக்ராட்/சீடா (ICTAD /CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேசசபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 09.12.2021 ம் திகதியிலிருந்து 23.12.2021 ம் திகதி வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து, தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 24.12.2021 ம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படவேண்டும், அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள், நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

09. கோரப்பட்ட வேலைகள் கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று- 25.02.2022) நாட்களாகும்.

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | பொன்னாலை நீர் விநியோகத்திட்டம் திருத்த வேலை சுழிபுரம் NP/14/41(17)/02/CF/09/2021 | 0.357 Mn | 60 நாட்கள் | C9/C8 கட்டிடம் | 3,600.00 | 25.03.2022 |
| 02 | தலைமை அலுவலக கட்டடத்திருத்தமும் தண்ணீர்த்தாங்கி திருத்தமும் சுழிபுரம் NP/14/41(17)/02/CF/10/2021 | 3.499Mn | 60 நாட்கள் | C8/C7 கட்டிடம் | 35,000.00 | 25.03.2022 |
| 03 | சங்கரத்தை சந்தை புனரமைத்தல் வட்டுக்கோட்டை NP/14/41(17)/02/CF/11/2021 | 1.073Mn | 60 நாட்கள் | C9/C8 கட்டிடம் | 10,750.00 | 25.03.2022 |
| 04 | வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் புனரமைப்பு (பாடசாலை வீதி மிகுதி வேலை, அற்கின்சன் வீதி மிகுதி வேலை, உபவில் வீதி 1 ஆம் ஒழுங்கை மிகுதி வேலை, குளிப்பன் வீதி 3 ஆம் ஒழுங்கை மிகுதி வேலை, நொத்தாரிசு வீதி 1 ஆம் ஒழுங்கை மிகுதி வேலை, கனகரட்ணம் வீதி 1 ஆம் ஒழுங்கை மிகுதி வேலை) NP/14/41(17)/02/CF/12/2021 | 2.349Mn | 60 நாட்கள் | C8 / C7 வீதிப் புனரமைப்பு | 23,500.00 | 25.03.2022 |
| 05 | சங்கானை பகுதி வீதிகள் புனரமைப்பு (சங்கரத்தை வீதி 3ஆம் ஒழுங்கை மிகுதி வேலை, ஓடக்கரை வீதி 3 ஆம் ஒழுங்கை மிகுதி வேலை, ஓடக்கரை வீதி 3ஆம் ஒழுங்கை கிளை வீதி மிகுதி வேலை, தொட்டிலடி கிளை ஒழுங்கை மிகுதி வேலை, கீரிமலை வீதி 1ஆம் ஒழுங்கை மிகுதி வேலை) NP/14/41(17)/02/CF/13/2021 | 1.46Mn | 60 நாட்கள் | C9 / C8 வீதிப் புனரமைப்பு | 14,700.00 | 25.03.2022 |
| 06 | அராலித்துறை வீதி 5 ஆம், 7 ஆம் ஒழுங்கைகள் மிகுதி வேலை (U வீதி) NP/14/41(17)/02/CF/14/2021 | 0.461Mn | 60 நாட்கள் | C9 / C8 வீதிப் புனரமைப்பு | 4,700.00 | 25.03.2022 |
| 07 | சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு (அம்மன் வீதி கிளை ஒழுங்கை மிகுதி வேலை.ஸ்ரீ கிருஸ்ணா வீதி மிகுதி வேலை ஆலமோடை வீதி மிகுதி வேலை காளுவன் வைரவர் வீதி தொல்புரம்) NP/14/41(17)/02/CF/15/2021 | 1.053Mn | 60 நாட்கள் | C9 / C8 வீதிப் புனரமைப்பு | 10,600.00 | 25.03.2022 |

கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 16.12.2021 அன்று பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

த.நடனேந்திரன்
தலைவர்,
பெறுகைக்குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,சுழிபுரம்.

09.12.2021 (CR 36175) (3/6)


# மாணவப் பருவத் திறமையே எதிர்காலத்தை தீர்மானிக்கும்

## பேராயர் ஜெபநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

மாணவப்பருவத்தில் ஒரு துறையில் தனது ஆர்வத்தையும், திறமையையும் காட்டாத ஒருவர் எதிர்காலத்தில் ஒரு துறையில் ஈடுபட்டு முன்னேறுவார் என்று கூற முடியாது. இவ்வாறு தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் எஸ். ஜெபநேசன் தெரிவித்தார்.

தர்சிகா அகிலன் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ள "நோய்க்கிடங் கொடேல்" என்ற நூலுக்கு அறிமுகவுரை வழங்கும் போது பேராயர் இதனைத் தெரிவித்தார். நூலாசிரியர்களாகவும், திரைப்பட இயக்குநர்களாகவும், அரசியல்வாதிகளாகவும், விஞ்ஞானிகளாகவும் பிரகாசித்தவர்கள் மாணவப்பருவத்திலேயே தமது துறைகளில் திறைமையைக் காட்டியுள்ளனர்.

இதற்கு உதாரணங்களாக பாலு மகேந்திரா, பத்மநாதன், கைலாசபதி, செங்கை ஆழியான் ஆகியோரைக் குறிப்பிடலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-4)



# உருக்குலைந்த நிலையில் கடற்கரையில் சடலம்!

அம்பாறை,டிசெ.9

மருதமுனை கடற்கரைப் பிரதேசத்தில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், சடலம் குறித்து ஆரம்பக்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர். கடற்கரைப்பகுதிக்கு பொலிஸாரால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் அடையாளம் காண முடியாத நிலையில் உருக்குலைந்துள்ளது. அண்மைக்காலமாக நாடு முழுவதும் கடற்கரைப்பகுதிகளில் உருக்குலைந்த நிலையில் சடலங்கள் கரையொதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-4)

# எரிவாயு வெடிப்புக்கள்: விசாரணைகள் துரிதம்

கொழும்பு,டிசெ.9

நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சம்பவங்களை ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இன்னும் ஒரு வாரத்துக்குள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,எரிவாயு வெடிப்புச் சம்பவங்களுக்கு இரண்டு நிறுவனங்களே பொறுப்பு என்று ஜனாதிபதி குழு உறுதிப்படுத்தினால், எரிவாயு இறக்குமதி செய்யும் இரண்டு நிறுவனங்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. நுகர்வோருக்கு நீதியை உறுதிப்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும்.

எரிவாயு சிலிண்டர்களின் இறக்குமதியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் நுகர்வோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று நான் தனிப்பட்ட முறையில் நம்புகின்றேன்.

எனினும், சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

குழு தன்னார்வமாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

நாளாந்தம் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகிவரும் நிலையில், அடுத்த சில நாள்களுக்கு சமையல் எரிவாயு பாவனை தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் - என்றார். (ஓ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.12.2021
வியாழக்கிழமை

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## போதையும் கல்வியும்!

"யாழ்ப்பாணத்தில் நீங்கள் தடுமாறி வீழ்ந்தால், உங்களைத் தூக்கி விடுபவர் ஓர் ஆசிரியராக இருப்பார்" இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு, யாழ்ப்பாணத்தின் கல்வி மட்டத்தைப் பற்றியும் யாழ்ப்பாணத்தின் கல்விச் சமூகத்தைப் பற்றியும் தெரிவித்த கருத்துக்கள்தான் இவை. ஆனால், இந்தப் பெருமையையெல்லாம் யாழ்ப்பாணம் இழந்து நெடுங்காலமாகின்றது.

இப்படியிருக்கையில், அண்மையில் வடமாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க, யாழ்ப்பாணம் கல்வியில் மீண்டும் மேலெழுவதற்கு உரிய அனைத்துத் திட்டங்களும் வகுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். ராஜபக்சக்களுடைய ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தின் கல்வியை மீண்டும் கட்டியமைப்பதற்கென்று திருப்திப்படும் வகையான திட்டங்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லைத்தான். ஆனால், இந்தக் குற்றச்சாட்டை பொத்தம்பொதுவாக ராஜபக்சக்கள்மீது திணித்து விடமுடியாது என்ற கசப்பான உண்மையை சம்பிக்கவும் அவரின் சகாக்களும்கூட ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு சமூகத்தையோ அந்தச் சமூகத்தின் இதயத்துடிப்பான இளைஞர் கட்டமைப்பையோ சீர்குலைக்க வேண்டுமாயின் போதையும் கலாசாரச் சீரழிவும்தான் இருபெரும் ஆயுதங்கள். இன்று யாழ்ப்பாணத்தில் இளையவர்களிடையே மிகைந்திருக்கும் போதைப்பாவனையும் வாள்வெட்டுக் கலாசாரமும் இதர கலாசாரச் சீரழிவுகளும் திடீரென ஓரிரவோடு ஏற்பட்ட மாற்றங்கள் அல்ல. யாழ்ப்பாணத்தின் இளைஞர் சமூகம், தன் கடந்த கால கல்விநிலையையும் இன விடுதலை வேட்கையையும் சிந்தித்துப் பார்க்கக்கூடாது என்பதற்காக அவர்களை நோக்கி வேண்டுமென்றே திருப்பி விடப்பட்ட விஷப்பரீட்சைதான் இந்தப் போதைக் கலாசாரமும், கலாசார சீரழிவும் என்பது 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சியில் இருந்தவர்கள்மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த பின்னர், 2009ஆம் ஆண்டிலிருந்து இந்தப் போதைக் கலாசாரம் நாளுக்குநாள் அதிகரித்து வந்திருந்தாலும், 2015ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, அதிகாரக் கதிரைகளை அலங்கரித்த மைத்திரி – ரணில் கூட்டரசும்கூட இந்தப் போதைக் கலாசாரத்துக்கு சரியான முறையில் எதிர்வினையாற்றவில்லை என்பது அறிந்ததே. இப்படியிருக்கையில் ஏதோ திடீரென்று யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சி நிலைபற்றி வெளிப்படுத்தப்படும் நீலிக்கண்ணீர் ஏன்?

யாழ்ப்பாணம் மீண்டும் கல்வியில் வானுயர வேண்டும் என்ற பிரயாசை உங்களுக்கு ஆத்மார்த்தமாக இருந்தால், இங்கு புரையோடிப் போயிருக்கும் போதைக் கலாசாரத்தை அடியோடு துடைத்தெறியுங்கள். விடுதலைப் புலிகளின் கடல்வழியான ஆயுதக் கடத்தலை முறியடித்தோம் என்று பிதற்றிக்கொள்ளும் உங்களால் ஏன் ஆயுதமற்ற சட்டவிரோதக் கடத்தல்காரர்களால் மேற்கொள்ளப்படும் போதைக் கடத்தலை நிறுத்த – தடுக்க – முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை? ஆக, போதைக் கலாசாரத்துக்கு எதிராக இதயசுத்தியுடன் அரசு எதிர்வினையாற்றினாலேயே கல்வியிலும் ஒழுக்க விழுமியத்திலும் யாழ்ப்பாணம் மீண்டும் வானுயரும்.

## ஆசிரியர்கள் ஒத்துழைக்காவிடில் பாடசாலைகளைத் தொடர முடியாது

### வடக்கு மாகாண கல்வி அமைச்சு வலியுறுத்து

**யாழ்ப்பாணம்,டிசெ.9**

**பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்காவிடில், தொடர்ந்தும் பாடசாலைகளை முன்னெடுத்துச்செல்லமுடியாது - என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனா கால சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் ஆசிரியர்கள் முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும். ஆசிரியர்கள் சிலர் முகக்கவசம் அணிவது உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

சுகாதார நடைமுறைகளை உரியவகையில் பேணுமாறு சுகாதார அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் சுகாதார வழிகாட்டுதல்களை உரியவாறு கடைப்பிடிக்கும்போது, மாணவர்களும் அவற்றைப் பின்பற்றுவார்கள். அதற்கான அறிவுறுத்தல்கள் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதேவேளை, பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் பயணிக்கும் மாணவர்கள் முகக்கவசம் அணிவதை நடத்துநர்கள் கண்காணிக்க வேண்டும் - என்றார். (ஒ-4)

## காணாமலாக்கப்பட்டோர் விடயம் சமரசம் செய்யும் விவகாரமல்ல!

### சட்டத்தரணி ரட்ணவேல் தெரிவிப்பு

வவுனியா, டிசெ. 9

காணாமலாக்கப்பட்டோர் விடயம் ஒருசில சலுகைகளைக்கொடுத்து, சமரசம் செய்யக் கூடிய விவகாரமல்ல என்பதை அரச தரப்பும் புரிந்துகொள்ள வேண்டும் என மனித உரிமைகள் சட்டத்தரணி ரட்ணவேல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

போரின்போது காணாமல் ஆக்கப்பட்டோர் விவ காரத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டிய கடமை அரசுக்கிருக்கின்றது. சரணடைந்தது மற்றும் காணாமலாக்கப்பட்டது எல்லாமே அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர்தான். பொலிஸ், இராணுவம் என்று அரசின் இயந்திரங்கள்தான் இந்தக் காணாமலாக்கப்பட்ட விவகாரத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றன.

மேலும் அந்தக் குற்றங்களைப் புரிந்தவர்கள் அந்த நேரத்திலும் சரி. இப்போதும் சரி அரசாங்கத்தின் பெரும் பொறுப்புக்களிலிருப்பவர்கள் அல்லது பொறுப்புக்களிலிருப்பவர்களுக்கு மிக நெருங்கிய சம்பந்தப்பட்டவர்கள். எனவே இவர்களைக் காட்டிக்கொடுக்காமல் இருப்பதற்கும், இவர்களைப் பாதுகாப்பதற்கும் தான் அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய எந்தவிதமான ஒரு நடவடிக்கையையும் எடுக்காமலிருக்கின்றது.

இந்தக் காணாமல் ஆக்கப்பட்டவருக்கான அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து அதன் ஆணையாளர்களாக தொடக்கத்தில் பணியாற்றியவர்கள் ஓரளவேனும் தங்களது கடமைகளை உணர்ந்தவர்களாக இருந்தார்கள். ஆனால், இந்த அரசால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆணையாளர்கள் முற்றுமுழுதாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருப்பவர்கள். எனவேதான் சர்வதேசத்தின் உதவியை நாட வேண்டிய கட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இருக்கிறார்கள்.

பொறுப்புக் கூறல் விடயத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மிகமிக ஆக்ரோஷமாக கடுமையாக இருக்கிறார்கள். எனவே இந்த விடயத்தைப் பூசிமெழுகுவதென்பது அரசால் இயலாத காரியம் - என்றார். (ம-110)

நாளை
10.11.2021
வெள்ளிக்கிழமை
கார்த்திகை 24
சுபநேரம் : மு.ப 6.16 - மு.ப 7.49
ராகுகாலம் : மு.ப 10.49 - பி.ப 12.19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் 14 . 12 . 1952



விண்ணில் 05 . 12 . 2021

## திருமதி மேரி பொலின் ஜெயந்திரா ராஜக்கோன்
### (ஓய்வுநிலை லிகிதர் விற்பனைத் திணைக்களம்)

இல. 32, றக்கா ஒழுங்கையை வசிப்பிடமாக கொண்ட திருமதி மேரி பொலின் ஜெயந்திரா கடந்த (05.12.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தேவசகாயம் - லில்லிகிரேஸ் தம்பதியரின் பாசமிகு மகளும், திரு.திருமதி ராஜக்கோன் கிருபையம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், திரு. ஜெயந்திரா ராஜக்கோனின் (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்) பாசமிகு மனைவியும், ஜெறோலின் (U.K), ஜொனத்தன் (U.K), ஜெனோசா (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிறஞ்சன் (U.K), மிதிலா (U.K), ஜெயந்தன் (U.K) ஆகியோரின் அன்பு மாமியும், தியோன், ஷிவோனா, கெய்டன், ஆஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திரு.கமிலஸ் செல்வரட்ணம் (France), திருமதி மங்களா (U.K), திருமதி லூட்ஸ் (France), திரு. அல்போன்ஸ், நவரட்ணம் (France), திரு. சார்லஸ் அழகரட்ணம் (France), திருமதி அஞ்சலா (U.K), திரு.ஜோர்ச் ஜெயரட்ணம் (France), திரு. எட்வின் குணரட்ணம் (U.K), திருமதி சியாமளா (U.K) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றீற்றா, காலஞ்சென்ற தேவராஜன் மற்றும் அருள்நாயகம், கில்டா, கிறிஸ்ரீன், விமலன், நளாயினி ஜோர்ச் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான திரு.தெய்வேந்திரராஜா, திரு.புவேந்திரா மற்றும் திருமதி இந்திராணி ரட்ணப்பிரகாசம், திரு.ராஜேந்திரா (ஜேர்மனி), காலஞ்சென்ற திரு.குலேந்திரா (கனடா), மற்றும் திரு.யோகேந்திரா (அமெரிக்கா), ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (10.12.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்பு: 0094 (76) 8785 537
0094 (76) 0848 507

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்.


# பாகிஸ்தான் படுகொலை போன்று இலங்கையிலும் பல சம்பவங்கள்!

## எடுத்துரைத்தார் சாணக்கியன் எம்.பி.

கொழும்பு, டிசெ. 9

**"பாகிஸ்தானில் நடந்ததுபோல் இலங்கையிலும் பல சம்பவங்கள் நடந்துள்ளன. அதுவும் அரச அனுசரணையில்கூட இடம்பெற்றுள்ளன"- என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,"பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தை நாம் கண்டிக்கின்றோம். தோழர் பிரியந்த குமாரவின் குடும்பத்தாருக்கு அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாகிஸ்தானில் நடந்த சம்பவத்தை இலங்கையிலுள்ள இளைஞர்கள் கண்டிக்கின்றனர். அனுதாபம் தெரிவிக்கின்றனர். இலங்கையிலும் இப்படியான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

1956, 1958 காலப்பகுதியில் அரச அனுசரணையுடன் தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். கறுப்பு ஜூலையின் போதும் தமிழ் இளைஞர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அவை தொடர்பான படங்களும் உள்ளன" என்றார். (த-22)

# கசிப்பு வைத்திருந்தனரென 3 சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.9

பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெவ்வேறு பகுதிகளில் கசிப்பை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை நாகர்கோவில் மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை, நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.சந்தேகநபர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஒ-4-125)

# பழைய வீட்டில் வெடிபொருள்கள்

கிளிநொச்சி,டிசெ.9

கிளிநொச்சி - இரத்தினபுரம் பகுதியிலுள்ள பழைய வீடொன்றில் வெடிபொருள்கள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

வீட்டின் உரிமையாளர் வட்டக்கச்சியில் வசித்து வரும் நிலையில், இரத்தினபுரத்தில் உள்ள தனது பழைய வீட்டைப் பார்வையிடச் சென்றார்.

வீட்டில் வெடிக்காத நிலையில் பழைய துப்பாக்கிப் பாகங்கள், ரவைகள் இருப்பதை அவதானித்தார். இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து சம்பவ இடத்துக்குச் சென்று, வெடிபொருள்களைப் பார்வையிட்டு, நீதிமன்ற அனுமதியுடன் அவற்றை செயலிழக்கம் செய்வதற்காக எடுத்துச் சென்றனர். (ஒ-4-113)



# வாசிப்பு மாத போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, சாவகச்சேரி பொது நூலகத்தால் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. பிரிவு 1 (10-12 வயது), பிரிவு 2 (13-14 வயது), பிரிவு 3 (15-30 வயது) ஆகிய பிரிவு மட்டங்களில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டிகள், கவிதை, கட்டுரை, சிறுகதை, சிறந்த வீட்டு நூலகம், சிறந்த வீட்டுத்தோட்டம் என்ற வகைகளில் நடத்தப்படவுள்ளன.

போட்டியில் பங்குபற்ற விரும்பு வோர் தங்களது பெயர் விவரங்களை சாவகச்சேரி பொது நூலகத்தில் வழங்கி, போட்டிக்கான நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி1-159)

# யானை தாக்கி இருவர் சாவு!

கொழும்பு,டிசெ.9

காட்டு யானை தாக்கி சர்வதேச கிரிக்கெட் அரங்கின் ஊழியர்கள் இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் ஹம்பாந்தோட்டை சூரியவெவப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

சடலங்கள் விளையாட்டரங்கின் பின்புறமாக உள்ள வீதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. உயிரிழந்த இருவரும் குறித்த விளையாட்டரங்கில் தங்கியிருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4)



# மாணவர்களுக்கு பரிசில் வழங்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.9

உலக மண் தினத்தை முன்னிட்டு, மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் கழகமும் இணைந்து மெய்நிகர் அலைமூலம் நடத்திய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு நேற்று முன்தினம் பரிசில்கள் வழங்கப்பட்டன.

வடமாகாண கல்வி திணைக்கள மாநாட்டு மண்டபத்தில், விவசாய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேழினி தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பயன்தரு மரக்கன்றுகளும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான நூல்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர், வடமாகாண விவசாய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சுற்றுச்சூழல் கழகத் தலைவர், செய லாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-4-20)

# ஈச்சளவக்கை காணிகள் விவரங்கள் ஆராய்வு

மன்னார்,டிசெ.9

மன்னார் பெரிய மடு அருகிலுள்ள ஈச்சளவக்கைக் குளத்தை அண்டிய காணிகளின் விவரங்கள் அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டன.



குறித்த பகுதியில், தனியார் எவருக்கும் காணிகள் உள்ளதா என்று மாந்தை மேற்கு பிரதேச செயலர் தலைமையிலான குழுவினர் ஆராய்ந்தனர்.

ஈச்சளவக்கை கிராம மக்களுக்கு விவசாயக் காணி வழங்குவதற்காக முன்பு தீர்மானிக்கப்பட்ட குளப்பகுதிக்குள் வனவளத் திணைக்களத்தினர் வருகை தந்த போது, தனியார் தமக்கும் அந்தப் பகுதியில் காணிகள் இருப்பதாகக் கூறி அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

இதனையடுத்து மாந்தை மேற்குப் பிரதேச செயலர் மற்றும் பிராந்திய வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்கள் குறித்த காணிகளைப் பார்வையிட்டனர்.எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினையைத் சுமுகமாகத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று மக்களுக்கு பிரதேச செயலர் உறுதியளித்தார். (ஒ-4-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக தரத்தில் அணு உலைகள்

## இந்தியா – ரஷ்யா இடையே ஒப்பந்தங்கள் கைச்சாத்து

**புதுடில்லி, டிசெ.9**
**இந்தியாவில் எதிர்வரும் காலங்களில் ரஷ்ய உதவியுடன் 10 க்கும் மேற்பட்ட அணு உலைகள் அமைப்பதற்கான ஒப்பந்தங்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் கைச்சாத்திடப்பட்டுள்ளன.**



டெல்லிக்கு இரண்டு நாள் பயணத்தை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் மேற்கொண்டு பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். இதன்போதே குறித்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.

எதிர்வரும் 2035 ஆம் ஆண்டுக்குள் ரஷ்ய உதவியுடன் இந்தியாவில் மேலும் 12 அணு உலைகள் அமைக்கப்படவுள்ளன. மேலும் பெற்றோல், எரிவாயு, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே மொத்தம் 20 ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின. இது குறித்து இந்தியப் பிரதமர் மோடி தெரிவிக்கையில்.

இந்தியாவைத் தாங்கும் தூண்களில் ஒன்றாக ரஷ்யா விளங்குகிறது. கடந்தகால வரலாற்றை திரும்பிப் பார்த்தால் இக்கட்டான நேரங்களில் இந்தியாவுக்கு பக்கபலமாக நின்று ரஷ்யா உதவி செய்துள்ளது. தீவிரவா தத்தை கட்டுப்படுத்துவதில் இருநாடுகளும் இணைந்து பணியாற்றும். ரஷ்ய உதவியுடன் 2035 ஆம் ஆண்டுக்குள் மேலும் 12 அணுஉலைகள் அமைக்கப்பட உள்ளன. இந்த அணு உலைகள் உலகத் தரத்தில் அமைக்கப்படும். இரு நாட்டு கூட்டு முயற்சியில் ஏற்கனவே பிரம்மோஸ் ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது போர் விமானம் தயாரிக்கும் பணி நடைபெற்றுவருகிறது. இதன் போது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவிக்கையில், அரசியல், வர்த்தக ரீதியாக இந்தியாவுடன் உறவை வலுப்படுத்த ரஷ்யா விரும்புகிறது. வர்த்தகத்தைப் பொறுத்தவரை நிர்ணயித்த இலக்கை எட்டவில்லை. எனவே இரு நாடுகளும் பல்வேறு துறைகளில் வர்த்தக உறவை அதிகரிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



நடிகர் ரஜினிகாந்தை அவரது போயஸ் கார்டன் இல்லத்தில் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் தோழியும், அ.தி.மு.க.வின் முன்னாள் பொதுச் செயலாளருமான சசிகலா, நேற்றுமுன்தினம் நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தார். (ச)






## அமெரிக்காவில் இந்தியர் சுட்டுக்கொலை

அமெரிக்காவின் கொலம்பஸ் நகரில் இந்தியர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். வங்கியில் பணத்தை வைப்புச் செய்யச் சென்ற போது அவரைப் பின்தொடர்ந்து வந்த மர்மநபர் சுட்டுக்கொன்று விட்டுப் பணத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். மன நிறைவு வரும். தொழில், பணியில் முன்னேற்றம் அதிகரிக்கும். கல்வி சிறக்கும். எடுத்த முயற்சி ஒன்று கைகூடும். சுபச்செய்தி வரும்.

**இடபம்:** உங்களின் திட்டம் வெற்றி பெறும். நண்பர்களின் ஆதரவு கிட்டும். நீங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக நல்ல முடிவுக்கு வரும். தடைகள் அனைத்தும் நீங்கும்.

**மிதுனம்:** உங்களை எதிர்த்தவர் மனம் மாறுவார். இனிமையான நாள். ஏற்ற இறக்கமான சூழ்நிலைகள் இன்றிலிருந்து மாறும். நினைத்து மகிழ்த்தக்க அனுபவம் ஒன்று கிடைக்கும்.

**கடகம்:** நண்பர் ஒருவருடன் இருந்த சண்டை முடிவுக்கு வரும். எதிர்பாராத திருப்பம் ஒன்று ஏற்படும். மகிழ்வான நாள். வீடு, இடம் வாங்கும் முயற்சியில் முன்னேற்றம் கூடும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** நட்பு வட்டம் விரிவடைந்தாலும் அதுபற்றி கவனமாயிருங்கள். தந்தைக்கு இருந்து வந்த நோய் அகலும். மாணவர்கள் மகிழ்வர். பணி பற்றிய முயற்சி ஒன்று நல்ல பலன் தரும். நேர விரயம் ஏற்படும்.

**கன்னி:** காலை நேரத்திலேயே பணம் வந்து மகிழ்ச்சி தரும். செல்வாக்கு [illegible] திப்பு [illegible] பணி தொழிலில் நாட்டம் அதிகரிக்கும். நிம்மதியான நாள்.

**துலாம்:** அதிகாலையில் வரும் செய்தி ஒன்று ஆனந்தம் அளிக்கும். உங்கள் முன்னேற்றத்துக்கு வித்திட்ட ஒருவரைச் சந்திப்பீர்கள். தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள். மனநிறைவு வரும்.

**விருச்சிகம்:** கூடுதல் முயற்சியால் தடைகளை அகற்றுவீர்கள். கவலை தீரும். உறவினரால் மனதில் ஏற்பட்ட குழப்பம் ஒன்று நீங்கும். நின்றிருந்த பேச்சுவார்த்தை ஒன்று மீண்டும் தொடரக்கூடும்.

**தனுசு:** எதிர்ப்புக்களை சமாளித்து வெல்வீர்கள். மனதில் அமைதி கூடும். உடன்பிறந்தோரால் ஏற்பட்ட இடையூறு ஒன்று அகலும். குழந்தைகளால் சிறு நன்மை உண்டு. உழைப்பு பயன் தரும்.

**மகரம்:** சொத்துகளை வாங்க, விற்க முயற்சி எடுக்கும் நாள். விரோதங்கள் விலகும். கடுமையாக உழைக்க வேண்டிவரும். சமீபத்தில் முயன்ற விடயம் ஒன்று வெற்றியாக முடியும்.

**கும்பம்:** நண்பர் ஒருவர் நல்ல செய்தியைக் கொண்டு வந்து சேர்ப்பார். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. வீண்பழி ஏற்படாதபடி கவனம் தேவை. இன்றை நிகழ்வு ஒன்று திருப்தி தரும். குதூகலமான நாள்.

**மீனம்:** [illegible] பற்றிய கவலை தீரும். [illegible] உருவாகும். திட்ட[illegible] விடயம் [illegible] திடீர் மாற்றம் [illegible] நேரலாம். பணியிடத்தில் அனுசரி[illegible] செல்வீர்கள். திட்டமிட்ட பயண[illegible] மாறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 . 02 . 1943



மறைவு
13 . 12 . 2019

சட்டத்தரணி

## திரு.மு.கதிர்காமநாதன்

கண்ணில் தெரிந்தவை விரைவில் உதிர்ந்து விடும்
தண்ணீரில் தெரிந்தவை விரைவில் கரைந்து விடும்
காற்றில் தெரிந்தவை விரைவில் பறந்த விடும்
மனதில் தோன்றியவை என்றும் அழியாதிருக்கும்

என்றும் உங்கள் நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள்.

(cs.729) (2) (2.6)

# கொழும்பு துறைமுக நகரத்தில் இலத்திரனியல் பணப்பயன்பாடு!

**கொழும்பு, டிசெ. 9**

**கொழும்பு துறைமுக நகரத்தில் இலத்திரனியல் பணப் பரிமாற்றத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.**

கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலய முகாமைத்துவ ஆணைக் குழுவின் தலைவர் சாலிய விக்ரமசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் துறைமுக நகர வளாகத்தில் மேற்கொள்ளப்படும் பொழுது போக்கு நடவடிக்கைகளுக்காக இந்த நாணயங்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதற்கிடையில், நாட்டில் கிரிப்டோ கரன்சியை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைக்கும் முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதுடன். இது குறித்து ஆராய்வதற்காக விசேட குழுவொன்றையும் நியமித்துள்ளது. (ம)

### வல்வெட்டித்துறை நகர சபை

# தவிசாளர் தெரிவு அடுத்த வாரம்

வல்வெட்டித்துறை நகர சபைக்கான தலைவர் தெரிவு எதிர்வரும் 15 ஆம் திகதி சபை மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் 2022 ஆம் ஆண்டுகான வரவு - செலவுத் திட்டம் இரு தடவைகள் தோற்கடிக்கப்பட்டதால், அதன் தலைவர் செல்வேந்திரா பதவியிழந்தார். அந்த வெற்றிடத்துக்குப் புதியவரை நியமிப்பதற்கான தெரிவு எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் என்று வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (ஒ-4)

# கூட்டமைப்பு விடயத்தில் ஏமாந்த அரச தரப்பு!

பிரதான எதிர்க்கட்சியுடன் இணைந்து தமிழர் தரப்பும் நாடாளுமன்றைப் புறக்கணிக்கும் என நாம் நினைத்தோம். ஆனால் மக்களின் பிரச்சினைகளைக் கலந்துரையாட நீங்கள் தயாராக இருந்தாலும் சஜித் பிரேமதாஸ உங்களை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதே அவர்களின் செயற்பாடுகள் மூலமாக வெளிப்பட்டுள்ளது. இதனை மாற்றி சகலருக்கும் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். தமிழ் மக்களுக்காக நீங்கள் சபையில் குரல் எழுப்புவதை நாம் முழுமையாக ஆதரிக்கின்றோம். தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க சகல நடவடிக்கைகளையும் எடுப்போம். இவ்வாறு அமைச்சர் சி.பி ரத்நாயக்க சபையில் தெரிவித்தார். நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். (ஒ-4)

### கட்டுப்பாட்டு விலையை மீறி

# சிமெந்து விற்பனை இருவர் கைது

கொழும்பு. டிசெ.9

கட்டுப்பாட்டு விலையை மீறி சிமெந்து விற்பனை செய்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி கலேகான மற்றும் கறுவாத்தோட்டம் பகுதியில் உள்ள கடை உரிமையாளர்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர் .

சிமெந்துப் பையின் விலை ஆயிரத்து 275 ரூபாவாக உள்ள நிலையில், கடை உரிமையாளர்கள் ஆயிரத்து 400 ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனரென நுகர்வோர் அலுவல்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடைகளின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி1)

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

# இறைச்சிக்கடைகள் மற்றும் பழைய முள்ளிப்பற்று உப அலுவலகத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் 2022

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 09.12.2021 தொடக்கம் 23.12.2021 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 23.12.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 23.12.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை. தலைமை அலுவலகம் இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி

அட்டவணை

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | கோழி இறைச்சிக்கடை | 733,500.00 | 16,000.00 | 2,000.00 |
| 02 | கருவாட்டுக்கடை | 12,500.00 | 5,000.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 03 | கோழி இறைச்சிக்கடை | 62,000.00 | 5,000.00 | 2,000.00 |
| 04 | பழைய முள்ளிப்பற்று உபஅலுவலகம் | 90,000.00 | 5,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 23.12.2021 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகை ரூபா. 300,000.00 இற்கு உட்பட்ட தொகையாயின் கேள்வித்தொகையின் ½ பகுதியையும், ரூபா. 300,000.00 இற்கு மேற்பட்ட தொகையாயின் 1/3 பகுதியையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாகப் பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
09. மாட்டிறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சுப்பிரமணியம் சுரேன்
தவிசாளர்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

09.12.2021 (CR 36172) 93(6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள்,பல்பொருள் வாணிபக்கடைகள்(நாவாந்துறை), ஒலிபரப்புச் சேவைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள் கேள்வி அறிவித்தல் - 2022
## (01.01.2022 - 31.12.2022)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2022 ம் திகதி முதல் 31.12.2022 ம் திகதி வரையான காலப் பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள்கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,000.00
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 09.12.2021 - 22.12.2021 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 23.12.2021 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 23.12.2021 மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 23.12.2021 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

### இறைச்சிக்கடை, பல்பொருள் வாணியம் மீள் கேள்வி - 2022

| இல | இறைச்சிக்கடை,பல்பொருள் வாணிபம் | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 213,100.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 49,629.87 |
| 3 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 826,956.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 100,500.00 |
| 5 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 970,600.00 |
| 6 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 154,691.00 |
| 7 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 311,000.00 |
| 8 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 417,819.00 |
| 9 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 607,340.70 |
| 10 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 681,074.45 |
| 11 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 160,000.00 |
| 12 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 438,050.00 |
| 13 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 63,206.67 |
| 14 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 632,950.00 |
| 15 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 525,100.00 |
| 16 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 500,175.00 |
| 17 | குருநகர் பன்றி இறைச்சிக்கடை | | 5,000.00 | 350,728.00 |
| 18 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.04 | 5,000.00 | 305,414.55 |
| 19 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 271,479.60 |
| 20 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 190,884.10 |
| 21 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 169802.02 |
| 22 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 188,593.49 |
| 23 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.11 | 5,000.00 | 56,332.02 |
| 24 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.12 | 5,000.00 | 9792.35 |

### சிற்றுண்டிச்சாலைகள், பொதுச்சந்தைக் மீள் கேள்வி - 2022

| இல | துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், பொதுச்சந்தை | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 7,536,000.00 |
| 2 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 606,000.00 |
| 3 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 360,000.00 |
| 4 | பண்ணை கடற்கரைப்பூங்கா சிற்றுண்டிச்சாலை | 15,000.00 | 1,500,000.00 |
| 5 | யாழ். பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 425,612.00 |
| 6 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 261,819.00 |
| 7 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | 1,000.00 | 11,461.19 |

விளம்பர ஒலிபரப்புச்சேவைகள் குத்தகைக்கு 2022.01.01. - 31.12.2024 (மூன்று வருடம்)

| இல | ஒலிபரப்பு விபரம் | கேள்வி அடையாள இலக்கம் | மதிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைமுறி விபரம் | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகை ரூபா | செலுத்தியிருக்கும் காலம் |
| 1 | நவீன சந்தைகட்டிடத்தொகுதி மேல்மாடி | MC/N.M.B/F-08/B.01/2021 | 1.5 மில்லியன் (1,500,000.00) | 30,000.00 | 09.02.2022 |
| 2 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல் | MC/S.M/F-08/B.02/2021 | 0.5 மில்லியன் (500,000.00) | 10,000.00 | 09.02.2022 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**மாநகர சபை , யாழ்ப்பாணம்.**

(cr.36171) (2.7)





# வெள்ளத்தை அகற்ற விரைவு நடவடிக்கை

கொடிகாமம், டிசெ.9

விடத்தற்பளை கிராமத்தில் தேங்கியிருந்த வெள்ளத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரின் வழிகாட்டலில், 3 பிரதான வாய்க்கால்கள் ஊடாக வெள்ளம் வடிந்தோட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

விடத்தற்பளை கெற்பேலி வாய்க்கால் சாவகச்சேரி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் மக்கள் பங்களிப்புடனும், விடத்தற்பளை வயல்வெளி வாய்க்கால் மற்றும் விடத்தற்பளை கரம்பகம் வாய்க்கால் என்பன கிராம மக்களின் பங்களிப்புடனும் சீர் செய்யப்பட்டன. (ஒ-4-159)



# வெற்றுக்காணியில் 3 குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.9

பருத்தித்துறை நாகர்கோயில் கிழக்குப் பகுதியில் உள்ள வெற்றுக் காணியிலிருந்து, 3 மோட்டார் குண்டுகள் நேற்று மீட்கப்பட்டன.

வெற்றுக் காணியைத் துப்புரவு செய்யும்போது குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனையடுத்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து குண்டுகளைச் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (ஒ-4-125)


## தேவை

பண்ணை வேலை செய்வதற்கு அனுபவம் உள்ளவர் தேவை.
**தங்குமிடம் உணவு வழங்கப்படும்.**
**077 377 9442** (CS 41518)(4.6)

## பெயர் மாற்றம்

மெரின்சிமுனை ஊற்காவற்துறையில் வசிக்கும் **சூசை மரியரட்சகாயன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **சூசை சகாயராசா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சூசை சகாயராசா என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகி றேன்.

(CS 41514)(4.6) **சூ.ஜ.ச சகாயராசா**

## அரசாங்க அறிவித்தல்
### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
### நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால நீடிப்பு

2021.11.09ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான **இறுதித்திகதி 2021.12.20 ஆம் திகதிவரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.**

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலாளருக்காக, மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(cr.36165) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தல்

- கலை முதற் தேர்வு, கலைமாணித் தேர்வு பகுதி - I, பகுதி – II (இறுதிச் சந்தர்ப்பம்)
- வணிக முதற் தேர்வு, இரண்டாம் தேர்வு, மூன்றாம் தேர்வு, நான்காம் தேர்வு (புதிய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
- வணிக முதற் தேர்வு, வணிகமாணி - பகுதி - I, பகுதி – II, பகுதி – III (பழைய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
- இசைமாணி / நடனமாணி முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருடத்தேர்வு (இறுதிச் சந்தர்ப்பம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் மேற்குறிப்பிட்ட வெளிவாரிப்பரீட்சைகளுக்கு (ஆண்டிறுதிப்பரீட்சை) தோற்றுவதற்காக குறித்த பட்டக்கற்கை நெறிகளுக்கு பதிவு செய்து, இதுவரை பூர்த்தி செய்யாத மாணவர்களுக்கு **இறுதிச் சந்தர்ப்பமாக** இப்பரீட்சைகளினை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட தீர்மானத்திற்கு அமைவாக, இறுதிச் சந்தர்ப்பமாக இப் பரீட்சைகள் காலாண்டு இடைவெளி அடிப்படையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் மாணவர்களின் நலன்கருதி, மேற்படி பாடநெறிகளுக்கான துரிதமீட்டல் வகுப்புக்களை யாழ். பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதற்கு தோற்றவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, பாட அலகுகள், மீட்டல் வகுப்புகளிற்கான கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம் என்பவை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் முகமாக மேற்படி விபரங்களை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய இணையத் தளத்தில் இருந்து (www.cod.jfn.ac.lk) விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் (download) செய்து திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி **31.12.2021 (வெள்ளிக்கிழமை)** ஆகும். மேலும் மேற்குறிப்பிடப்பட்ட இப்பரீட்சைகள் எக்காரணத்திற்காகவும் மீண்டும் நடத்தப்படமாட்டாது என்பதனையும் இம் மாணவர்களது கற்கைநெறிக்கான பதிவுகள் யாவும் இப்பரீட்சையின் பின்னர் காலாவதியாகும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**08.12.2021**

(CR 36176) (3/6)



## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 06 . 1951



மறைவு 07 . 12 . 2021

## பொன்னுத்துரை இரவீந்திரன் (சூரியா)

(ஓய்வுபெற்ற சுகாதார முகாமைத்துவ உதவியாளர்
போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இரவீந்திரன் நேற்றுமுன்தினம் (07.12.2021) செவ்வாய்க் கிழமை அவுஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பூமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், பவளத்தின் அன்புக் கணவரும், மாயா (அவுஸ்திரேலியா), திவ்யா (பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்), திவீதா (மருந்து கலவையாளர்), வித்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோணேஸ்வரன் (அவுஸ்திரேலியா), ஜெகஜீவன் ராம் (மண் பரிசோதகர்), அரிகரன் (சுகாதார உதவியாளர்), கிரிதரன் (ஆசிரியர்) ஆகியோரின் மாமானரும், துசாரா, மாதுரி, நிதின், நவின் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற முரளீதரன் மற்றும் பிரபாகரன், கங்காதரன், யசோதரா, கௌசல்யா ஆகியோரின் மூத்த சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**182 3, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(... 41522) (2/6)

தகவல்:
**குடும்பத்தினர்**
**021 222 1156**


துஷ்பிரயோகத்தில் இருந்து தப்பிக்க

# மோட்டார் சைக்கிளிலிருந்து குதித்த பெண் படுகாயம்

கிளிநொச்சி, டிசெ.9

வீதியில் நின்று கொண்டிருந்த குடும்பப் பெண்ணை ஏற்றிச் சென்ற நபர், அவருடன் தவறாக நடக்க முயற்சித்துள்ளார். இதனையடுத்து குறித்த பெண் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே குதித்துள்ளார். அதில் அவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த வாரம் பூநகரி 10 ஆம் கட்டைச் சந்திக்கும் முக்கொம்பன் கிராமத்துக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் பூநகரி பிரதேச மருத்துவமனைக்குச் சென்று, பூநகரி 10 ஆம் கட்டைப் பகுதியில் பேருந்துக்காக காத்து நின்றார். பாலூட்டும் குழந்தை வீட்டில் இருந்தமையால், அவசரமாக அவர் வீடு செல்ல வேண்டும் என்பதால், வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிளை மறித்து வீடு செல்ல முயற்சித்தார்.

குறித்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் ஏற்றிய நபர் அவருடன் தவறாக நடக்க முற்பட்டார். இதனால் வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிளிலிருந்து அந்தப் பெண் குதித்துள்ளார். இதன் போது அவரது முகம் உட்பட பல இடங்களில் படுகாயமடைந்தார். சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார். குறித்த பெண் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-4-13)


## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.
## 01.01.2022 முதல் 31.12.2022 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2022

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 09.12.2021 - 22.12.2021
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 23.12.2021 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 23.12.2021 மு.ப 10.30 மணி

| இல. | கச்சாய் உப அலுவலகம் | கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் ( மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம். | 11,996,600.00 | 120,000.00 | 750.00 |
| 2 | கொடிகாமம் மீன் சந்தை | 1,386,100.00 | 13,870.00 | 750.00 |
| 3 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 829,000.00 | 8,300.00 | 750.00 |
| 4 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,168,500.00 | 11,700.00 | 750.00 |
| 5 | களஞ்சிய அறை இல - 01 | 26,200.00 | 500.00 | 750.00 |
| 6 | களஞ்சிய அறை இல – 02 | 24.900.00 | 500.00 | 750.00 |
| 7 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 14,500.00 | 500.00 | 750.00 |
| 8 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் -01 | 17,700.00 | 500.00 | 750.00 |
| 9 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் - 02 | 20,000.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் - 03 | 16,000.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 11 | வரணி பொதுச்சந்தை | 62,400.00 | 700.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 12 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 245,300.00 | 2,500.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 13 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 39,500.00 | 500.00 | 750.00 |
| 14 | மிருசுவில் பொதுச்சந்தை | 4,600.00 | 500.00 | 750.00 |
| 15 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 28,900.00 | 500.00 | 750.00 |
| 16 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 15,600.00 | 500.00 | 750.00 |
| | **நாவற்குழி உப அலுவலகம்** | | | |
| 17 | நாவற்குழி பொதுச்சந்தை | 30,700.00 | 500.00 | 750.00 |

**நியந்தனைகள்:-**

01. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 09.12.2021 தொடக்கம் 22.12.2021 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
03. கேள்வித் தொகை, படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும். (வரி நீங்கலாக)
04. 23.12.2021 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.
05. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
06. கால்நடைகள் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
07. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
08. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/8 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
09. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு, ஒரு பிரதியினை **"தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்"** என்ற **விலாசத்திற்கும், மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**08.12.2021.**

**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை,**
**கொடிகாமம்.**

(CR 36174) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மண்ணில்
# பொறியியல் துறையில் முதன்மையான ஒரு தமிழ்ப்படைப்பு
# "ஒப்பந்த முகாமைத்துவம் (நிர்மாணத்துறை)"
## இன்று வெளிவருகிறது

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் மணியான வாழ்த்துக்கள்



பட்டயம் பெற்ற பொறியியலாளர் சிவலிங்கம் உருத்திர லிங்கம் நிர்மாணத் துறையில் அனுபவம் மிக்கவர் - மூத்தவர். அவர் தன்னுடைய அறிவையும், அனுபவத்தையும் அடுத்து வருகின்ற சந்ததிக்கு வழிகாட்டும் வகையில் இட்டுச் செல்வது பாராட்டுக்குரிய தொன்றாகும். அதிலும் குறிப்பாக ஆங்கிலத்தில் அதியுயர் புலமை கொண்ட அவர், தன்னுடைய சமூகத்துக்குப் பயன்தரும் வகையில் - அனைவரும் புரிந்து கொள்ளத்தக்கதாக இலகு தமிழில் தந்திருக்கிறார். அவர் வாஞ்சையுடன் பின்பற்றும் நிர்மாணத்துறையில் சமூகத்துக்குப் பயன்தரும் வகையில் - அனைவரும் புரிந்து கொள்ளத் தக்கதாக இலகு தமிழில் தந்திருக்கிறார். அவர் வாஞ்சையுடன் பின்பற்றும் நிர்மாணத்துறையில் உலகப் புகழ் பெற்ற மாமேதை **பேராசிரியர் அ. துரைராஜா** அவர்களைப் போலவே, அடுத்த தலைமுறையை நெறிப்படுத்தும் சீரிய பணியாக "நிர்மாணத்துறை ஒப்பந்த முகாமைத்துவம்" என்ற நூலின் ஊடாக ஒழுங்கு முறைகளையும், அடிப்படை உண்மைகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றார்.

நிர்மாணத்துறையில் தேவையான அத்தனை தகைமைகளையும், அனுபவத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள பட்டயம் பெற்ற **பொறியியலாளர் சிவலிங்கம் உருத்திரலிங்கம்** அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் நிர்மாணத் துறைக்கான அதிகார சபையின் ஆலோசகர்களில் ஒருவராகத் திகழ்வது அவரது புலமைக்கும் திறமைக்கும் சான்று.

அவர் தன் துறை சார்ந்து பணி நின்று இளைய தலைமுறையை வழிகாட்டும் பணியில் ஒரு முயற்சியாக இந்த நூலை வெளியீடுவதையிட்டு எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர் நீண்ட ஆயுளோடு, ஆரோக்கியமாக வாழ்ந்து அவர் பணி தொடர வேண்டும் என்று எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிகின்றேன்.

**பேராசிரியர். சி. சிறிசற்குணராஜா,**
துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.

## மூத்த பொறியியலாளர் திரு.விக்கினேஸ்வரன் அவர்களின் பெருமிதம்

என் நீண்ட கால நண்பர் எந்திரி சி.உருத்திரலிங்கம் அவர்களுடைய இந்நூலுக்கு வாழ்த்துரை எழுது வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடம் குடிசார் எந்திரவியல் துறையில் 1970 ஆம் ஆண்டு முதல் தரத்தில் சித்தி அடைந்த பின் 1971 ஆம் ஆண்டு மகாவலி அபிவிருத்திச்சபையில் பொறியியலாளராக நிய மனம் பெற்றார். நீர்ப்பாசன திணைக்களமும்,மகாவலி அபவிருத்திச்சபையும் சில திட்டங்களை இணைந்து வடிவமைத்தமையால் எங்களுக்குள் தொடர்பு ஏற்பட்டது. அன்றில் இருந்து அவரை நன்கு அறிவேன்..

1983 ஆம் ஆண்டு மகாவலி தலைமைக்காரியாலயத்தில் பணிபுரிந்த பொழுது கறுப்பு ஜூலை இனக்கலவரம் நடந்தது.. இதனால் ஏற்பட்ட தாக்கங்களினால் வேலையை விட்டு விலகி யாழ்ப்பாணம் திரும்பினார். பருத்தித்துறை சாவகச்சேரி குடிநீர் விநியோகத்திட்டத்தில் நிர்மாண முகாமையாளராக சமக்கோன் கம்பனியில் இணைந்து கொண்டார். அத்திட்டம் போர் சூழல் காரணமாக 1987 இல் இடைநிறுத்தப்பட்ட பொழுது தனக்கு என Ruhlins கம்பனியை உருவாக்கிக்கொண்டார். அன்று முதல் இன்றுவரை தனி ஒருவனாக பொறியியல் துறையில் சவால்களை எதிர்நோக்கி சாதனைகள் புரிந்துள்ளார். அதனால் அவருடைய பழுத்த அனுபவத்தின் பிழிந்து எடுத்த இரசமாகவே இன் நூல் வெளிவருகின்றது. செயல்பாட்டில் வெற்றி பெற அல்லது சாதனை புரிய வேண்டின் நல்ல கல்வி அறிவோடுபட்டறிவும் மிகவும் அவசியம். ஆகவே நிர்மாண துறையில் ஈடுபடுகின்றவர்கட்கு சிறந்த வழிகாட்டி நூல் ஆக இது பயன்படும் என்பதில் ஐயம் இல்லை.

நான் யாழ் பல்கலைக்கழக பேரவையில் உறுப்பினராக இருந்தபோது (2015,2016) ஒரு பிரச்சனையை இனம் கண்டேன். அதாவது ரூபா 4500 மில்லியன் பெறுமானம் உடைய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அந்த வேலையை திறமையாக கையாள்வதற்கு உரிய பொருத்தமான பொறி முறை காணப்படவில்லை. பேரவையின் அங்கீகாரத்தோடு பொருத்தமான பொறி முறையை வகுப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. அதில் உருத்திரா முக்கிய பங்கு ஆற்றியமையால் குழு தன் அறிக்கையை குறுகிய காலத்தில் சமர்ப்பித்து பேரவையின் அங்கீகாரத்தையும் பெற்று கொண்டது.

நிர்மாண ஒப்பந்த வேலைகளில் பிணக்குகள் பல காரணங்களுக்காக ஏற்படுகின்றன நீதிமன்றிற்கு செல் லாமல் அவற்றை நியாய விசாரணை மூலம் தீர்ப்பதற்கு ஒப்பந்தங்களில் இடம் உண்டு. இத்துறையில் நன்கு தேர்ச்சி பெற்றவர் ஆக உருத்திரா திகழ்கின்றார்.

**வாழ்க்கை எனும் ஓடம் வழங்குகின்ற பாடம் மானிடரால் மறக்க வொண்ணா வேதம்** என்பதற்கு இணங்க உருத்திரா உடைய பொறியியல் வாழ்க்கை கற்று தந்த பாடம் பெரியது. அதில் ஒரு பகுதியே இந்நூல் வாயிலாக வெளிவந்து உள்ளது. ஏனையவும் பல நூல்கள் ஊடாக வெளிவர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இந்நூலானது சிறிய, நடுத்தர ஒப்பந்தங்களிற்கே பெரும்பாலும் பொருந்துவதாக அமைந்துள்ளது அத்தோடு வேலைத்தரக்கட்டுப்பாடு விபரமாக அலசப்படவில்லை.

பாரிய திட்டங்களின் ஒப்பந்தங்கள் பற்றி அடுத்த நூல் விரிவடைய வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

Calamity is an opportunity for development என்பதற்கு இணங்க 1983 இல் எதிர் நோக்கிய ஆபத்தின் உணர்வலைகள் உருத்திராவிற்கு மன வைராக்கியத்துடன் தன்னம் தனியாக பொறியியல் துறையில் உச்ச நிலையை அடைய வழி கோலியது.

விக்னேஸ்வரன்,
பட்டையப்பொறியியலாளர்,
முன்னாள் யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்

## இலங்கை தேசிய ஒப்பந்தக்காரர் சங்கத்தின் வடமாகாணக்கிளையின் தலைவரின் மகிழ்ச்சியின் ஒரு சான்று

"ஒப்பந்த முகாமைத்துவம்" - இலங்கையின் புலமைமிக்க, சிரேஷ்ட புத்திஜீவிகளில் ஒருவரும், நிர்மாணத் துறையில் மிகவும் பழுத்த அனுபவம்வாய்ந்த பொறியியலாளரும், நடுநிலைத்தீர்ப்பாளருமான திரு.சி.உருத்திரலிங்கம் ஐயாவின் படைப்பாக வெளிவருவது உளமார்ந்த மகிழ்ச்சியளிக்கும் ஆக்கபூர்வமானதும், காலத்தின் தேவை கருதியதுமான வெளியீடாகும். நிர்மாணத்துறையின் விரல் விட்டு எண்ணக்கூடிய வித்துவத்திறமையாளர் மட்டுமன்றி, இத்துறையின் ஓர் கலங்கரை விளக்காக திகழ்பவர் பொறியியலாளர் அவர்கள். பல நிர்மாணத் துறைசார்ந்த மிகச்சிக்கலான விடயங்களுக்கான பொருத்தமான தீர்வை வழங்கக்கூடிய ஆற்றல்மிக்கவர்.

இத்துறையில் தெளிந்த நீரோடை போன்று, ஒப்பந்தகாரர்களது பல பிணக்குகள் மற்றும் நெருக்கடிகளை "நுண்மான் நுழைபுலமிக்க" அதிதிறன் வாய்ந்த உய்த்தறியும் அறிவாற்றலைக் கொண்டு தீர்த்துவைத்து அதன் சிறப்பினை உயர்ந்த தரத்தில் பேணுபவர். அதீத தொழில் பக்தி மிக்கவர். நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முதல் விடயம் ஐயாவின், "நேர முகாமைத்துவம்".

கடந்த பல தசாப்தங்களில் தனது சொந்த செலவில் பல வல்லுனர்கள், வினைத் திறனுடன் கூடிய, செயலூக்கம் மிக்க ஆளணியினர் பலரை உருவாக்கியவர். இன்று பல்வேறு தர நிலைகளில், பல தொழில் நிலையங்கள் மற்றும் உயர் நிறுவனங்களில் பொறியியலாளரால் உருவாக்கப்பட்ட பலர் சேவை யாற்றுகின்றமை குறிப்பிடத் தக்கது. பொறியிலாளரால் புடம்போடப்பட்ட பலர் சுயதொழில் வல்லுனர்களாகவும் திகழ்கின்றமை மற்றுமோர் சிறப்பாகும். குறைந்தபட்சம் "கம்பன் வீட்டுக் கட்டுத்தறி" தரநிலையில் இவரால் உருவாக்கப்பட்ட ஆளணியினர் இன்றும் பிரகாசிக்கின்றமை அவரது வழிகாட்டலின் சிறந்த பெறுபேறாகும். நிர்மாணப் பயிற்சி மற்றும் அபி விருத்திக்கான நிறுவனத்தின் (CIDA _ Succer of ICTAD) நிர்மாணத்துறை ஒப்பந்தகாரர்களுக்கான தமிழ்மொழி மூல நூலுருவாக்கத்தில் அரும்பணியாற்றி, அதனை அச்சுப்பதிப்பு செய்து வெளிக்கொணர்வதில் முன்னின்று உழைத்தவர். இன்று அதன் பிரதிபலன்களை "நான் உட்பட" இலங்கையின் பல தரநிலையிலுள்ள நிர்மாண ஒப்பந்தகாரர்கள் அனுபவிப்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் கூறுவதற்கு பல உயர்ந்த விடயங்கள் உள்ளபோதும், இரத்தினச் சுருக்கமாக இப்படைப்பின் மெருகிற்கு பங்கமில்லாது சுருக்கமாக எனது கருத்துக்களை பதிவிட்டுள்ளேன். தனது செந்த முயற்சியில் வெளியீடுசெய்யவுள்ள இப்பெறுமதிவாய்ந்த "நூல்" நிர்மாணத்துறையிலுள்ள அனைவரிடமும் ஓர் பொக்கிஷமாக இருத்தல் அவசியம். இவ்வாறான அரிய நூல்கள் எமக்கு ஓர் வரப்பிரசாதம் எனில் அது மிகையன்று. அவரது எதிர்கால முயற்சிகள் அனைத்தும் சிறப்பாக வெற்றிபெற எனது நல்வாழ்த்துக்களை கூறி அமைகின்றேன்.

**அ.அன்ரன் றேமனஸ் குரூஸ்**
தலைவர்
இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம், வடமாகாண கிளை

## நிர்மாணியொருவரின் ஒரு துள்ளல்

நிர்மாணத்துறையில் "ஒப்பந்த முகாமைத்துவம்" என்ற இந்த நூலானது வடமாகாண நிர்மாணத் தொழில் துறையின் வரலாற்றில் தமிழில் வெளிவரும் முதல் நூலாகும். எந்தவொரு தொழில் துறையிலும் முகாமைத் துவத்தின் திறனே வெற்றியைத் தீர்மானிக்கின்றது. அந்த வகையில் ஒப்பந்த முகாமையானது நிர்மாணத் தொழில் துறையில் முக்கியத்துவம் பெறுகிறது. இதில் தொழில்சார் அடிப் படையில் பணிகள் எவ்வாறு முகாமை செய்யப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இது ஒப்பந்த முகாமைத்துவம் பற்றிய புரிதலுக்கான ஒரு வாசலாகும். இந்த படைப்பு, ஐயங்களால் அலங்கரிக்கப்படாத எண்ண ஓட்டங்களால் உருப்பெற்றுள்ளது. என்னிடமே நான் தோற்றுவிடுவேனோ என்று தன்னம்பிக்கையற்று அச்சப்படுபவர்களுக்கு இது ஒரு அருமருந்து. படிக்க வேண்டியவற்றை படிக்க முடியாமல் உள்ளவர்களுக்கு இது ஒரு ஆசான். நிர்மாணத் தொழிலில் "காரியத்தை சரியாகச் செய்தல்" (Doing things Right) "சரியான காரியத்தைச் செய்தல்" (Doing the Right things) என்பதில் இந்த"ஒப்பந்த முகாமைத்துவம" என்றபடைப்பானது சரியாக/நேர்த்தியாக வழி நடத்தவல்லதாகும்.

ஒப்பந்தகாரருக்கு பிரச்சினைகள் நிச்சயமானது. ஆனால் எதிர்கொள்ளல் என்பது ஆளுக்கு ஆள் வேறுபட்டது. (Problem is Mandatory, But Suffering is Optional) ஒப்பந்த முகாமைத்துவத்தைக் கற்றுக் கொள்வதன் மூலம் பிரச்சி னையை வெற்றி கொள்ளமுடியும். ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்த முகாமைத்துவம் குறித்த விளக்க மின்மை, தத்தளிப்பு, திணறல், தவறானபுரிதல் எல்லாவற்றிற்கும் இது விடைசொல்கிறது. இது நிர்மாணத் தொழில் சார்ந்தவர்களை அவர்களது தொழிலில் நேர்மை, கண்ணியம், உறுதி, மற்றும் தெளிவை ஏற்படுத்தி அபிவிருத்தியை நோக்கி அழைத்துச்செல்லவல்லது.

திணைக்களத்தினரின் இயல்பின் விளைவை எதிர்கொள்ள இந்த படைப்பானது ஒப்பந்தகாரருக்கு சிறந்த வழிகாட்டியாகும். திணைக்களத்தினா் அவர்களின் ஆற்றலிலும் பார்க்க ஏதோ வொன்றுக்கு முயற்சிக்கும் போது ஒப்பந்தகாரர் தமது முகாமைத்துவத் திறனால் அதனை வெற்றி கொள்ளமுடியும். நிா்மாண கைத்தொழில் என்பது ஜெயித்துப் பிழைப்பதல்ல. போராடி ஜெயிப்பது. இதற்கு இந்த "ஒப்பந்த முகாமைத் துவம்" என்ற படைப்பானது ஒரு கருவியாகப் பயன்படுகிறது. எப்படி இருந்தாலும் திறப்புக்களைக் கொண்டு கதவை எப்படி திறக்கின்றோமோ அப்படியே அதை மூடிவிடவும் முடிகிறது.

ஏற்கனவே ஆங்கில மொழியில் பலநூல்கள் வெளிவந்துள்ளபோதும் தமிழ் மொழியில் இதை உருவாக் குவதற்கு பொறியியலாளர் உருத்திரலிங்கம் ஐயா அவா்கள் தன்னை அா்ப்பணித்துள்ளாா். அவா் வயது முதிா்ந்த காலத்திலும் அவரது ஏனைய பணிச் சுமைகளையும் தாங்கி, இதையும் மேலதிக சுமையாக ஏற்று, ஆா்வத்துடன் இந்தப் படைப்பை அவா் சாா்ந்த தமிழ்ச் சமூகத்திற்கு சமாப்பணமாக்கியுள்ளாா். இது தமிழ்ச் சமூகத்திற்குக் கிடைத்த அழியாத சொத்தாகும். ஐயாவினுடைய இந்த ஆா்வமும் அா்ப்பணிப்பும் வரலாற்றுப்பக்கத்தில் சிறந்த பக்கமாக அமையும். ஐயாவின் இந்த முயற்சி பரந்து, விரிந்து மேலும் பல அலைகளாக வெளிவர வாழ்த்துகிறேன்.

**ஹெல்மன் எஞ்ஜினியறிங்**

**எம்மை இப்புத்தகத்தினை எழுதக் காரணகர்த்தாவாக விளங்கிய எம்மைச்சேர்ந்த பொறியியலாளர்கள் குழாமிற்கு எமது கோடான கோடி நன்றிகள் உரித்தாகுக....!**

(CS 780) (3/6)

**படைப்பாளி சி. உருத்திரலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2022

01. வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** : 2021.12.09 - 2021.12.20 **நண்பகல்** 12:00 **மணிவரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** : 2021.12.23 **பி.ப** 14.00 **மணி வரை**
**கேள்வி திறக்கும் திகதி** : 2021.12.23 **பி.ப** 14.30 **மணி**

02. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

03. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருத்தல் வேண்டும்.

04. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.

05. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரத்தில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 2,500.00 இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ரூபா 10,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் **இணைப்பிரதி** எனவும் எழுதப்பட்டு இணைப் பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத் திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

07. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.

08. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள், கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்

09. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேசசபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| பெறுகை இலக்கம் | சேவை விபரம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| NP/14/41(17)/02/PC/01 | பாதுகாப்புச் சேவை | 05 | 02 | 2022.01.01-2022.12.31 |

**த.நடனேந்திரன்**
**உள்ளூராட்சி பெறுகைக்குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,சுழிபுரம்.**
**2021.12.09**

(cr.36167)(2x 6)

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல்- 2022
## வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை

2022ஆம் ஆண்டில் சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவுசெய்து கொள்வதற்கு விரும்பும் தகைமை வாய்ந்த வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**வழங்கல்கள்**

01. அலுவலக உபகரணங்கள்/தளபாடங்கள் /உருக்குவீட்டு உபகரணப்பொருடகள்/ பிளாஸ்ரிக்பொருட்கள்.
02. காகிதாதிகள் மற்றும் எழுதுபொருட்கள்.
03. மின்சார உபகரணங்கள் மற்றும் தெருவிளக்கு உபகரணங்கள்.
04. கொங்கிறீட் பொருட்கள்/ ஹியூம் குழாய்கள்/சீமெந்துக் கற்கள்.
05. ரயர் வகைகள்/ரியூப் வகைகள் / பற்றிவகை.
06. வாகனம், இயந்திரங்களின் உதிரிபாகங்கள் மற்றும் துணைப்பொருட்கள்.
07. கணினிகள் மற்றும் கணினி துணைப்பொருட்கள்.
08. புகைப்படப்பிரதி இயந்திரம்/தொலைநகல்இயந்திரம்/ரோணியோஇயந்திரம்/டுப்ளோஇயந்திரம்.
09. நூலக நூல்கள்.
10. சீமெந்து/கண்ணாடி உற்பத்திகள்/அலுமினியவேலைகள் / இரும்பு உட்படகட்டப்பொருட்கள்.
11. அறிவித்தல் பலகைகள் /பதாதைகள் /பெனர் /ஸ்டிக்கர்.
12. துடைப்பம் /விளக்குமாறு/தும்புத்தடி/தூரிகைகள்/சிறியகால்துடைப்பங்கள்/கழுவும் திரவங்கள்.

**சேவைகள்**

01. அனைத்து வகையான அச்சுவேலைகள்.
02. அலுவலக தளபாடத் திருத்தவேலைகள்.
03. கணினிதுணைப்பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்.
04. மோட்டார் வாகன திருத்த வேலைகள் /சேவிஸ் செய்தல்.
05. பதாதைகள் மற்றும் பெயர்ப்பலகைகள் வரைதல்/தயாரித்தல்/அச்சடித்தல்
06. இறப்பர் முத்திரைதயாரித்தல்.
07. டியூப் ஒட்டுதல், ரயர்களுக்கு திரிவைத்தல், ரயர்களை மீளநிரப்புதல், ரயர்களை மாற்றுதல் போன்றசேவைகள்.
08. நிர்மாண ஒப்பந்த வேலைகள்

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரடியாகவே அல்லது தொலைபேசி இல. 0212241130 மூலமாகவோ அறிந்து கொள்ளலாம்.

**பொதுநியந்தனைகள்**

01. பதிவு செய்துகொள்ளும் அனைத்து வழங்குநர்களும் ஒவ்வொரு அம்சத்தின் பொருட்டும் வெவ்வேறான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியையும்சமர்ப்பித்தல் வேண்டும்.
பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்துகொள்ளும் நிர்மாண ஒப்பந்ததாரர்

| | |
|---|---|
| 01. 50 000.00 ரூபாவரை | 500.00 |
| 02. 50 000.00 ரூபாமுதல் 1500 000.00 வரை | 1500.00 |
| 03. 1500 000.00 ரூபாமுதல் 2000 000.00 வரை | 2000.00 |
| 04. 2000 000.00 ரூபாக்குமேல் | 2500.00 |

ஏனையோர் ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித் தனியாக 500.00ரூபா கட்டணத்தையும் செலுத்தவேண்டும்

02. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் பதிவுசெய்து கொண்டுள்ள வழங்குநர்களிடம் விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறுபெறுகை செயற்பாடுகளைக் கையாளும் உரிமை சபையைச் சார்ந்தது.

03. இந்தச் சபையினால் வழங்கல் கட்டளை பிறப்பிக்கப்பட்டு உரியகாலத்தில் பொருட்கள்சேவையை வழங்கத்தவறினால் முன்னறிவித்தலின்றி வழங்கல் கட்டளை இரத்துசெய்து அடுத்த வழங்குநருக்கு கட்டளை அனுப்பப்படும் என்பதைகவனத்தில் கொள்ளவும். குறித்தகாலத்தில் தரமானபொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தவறும் வழங்குநர்கள் / ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு பட்டியலில் சேர்க்கப்படும்.

04. தபால்மூலம் விண்ணப்பிப்பதாயின் "செயலாளர், வலிகாமம் வடக்குபிரதேசசபை"என்னும் பெயருக்கு வரையப்பட்ட காசோலை மூலம் அல்லது வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் 7573141 இலங்கை வங்கி காங்கேசன்துறை கணக்கு இலக்கத்திற்கு வைப்புச்செய்து வைப்புச்சீட்டு மற்றும் விண்ண்ப்பப்படிவத்தினை பதிவுதபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

05. எல்லா விண்ணப்பங்களும் 2021.12.28 ஆந் திகதிபி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்குமுன் தவிசாளர் வலிகாமம் வடக்குபிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக வலிகாமம் வடக்குபிரதேச சபை தலைமைஅலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். கடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் "2022 வருடத்திற்கான வழங்குநர் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல்" என்று பதிவுசெய்தல் வேண்டும்.

**தவிசாளர்,**
**[illegible]ந்தன்,**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை**

(CR 36177 ) (3 / 6)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா
077 334 1281

## தேவை

யாழ்நகரில் இயங்கும்
நிறுவனம் ஒன்றிற்கு **மேசன்மார், கூலியாள்கள்** தேவை.
077 363 5631, 077 841 7582


## மரண அறிவித்தல்



## நல்லையா கணேசானந்தன்

யாழ் திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நல்லையா கணேசானந்தன் அவர்கள் 05.12.2021 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா கமலாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவரகளான கதிரவேலு - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும், இராஜேஸ்வரி (குட்டி) அவர்களின் அன்புக் கணவரும்,ஜெகன், துஸ்யந்தன், சுஜித்தா, சுஜிரேகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம்,பாஸ்கரானந்தன் மற்றும் சற்குணதேவி, பத்மதேவி, சிவானந்தன் ஆகியோரின் சகோதரரும், குகானந்தன், பிரதீபராஜா, ரஜீவி, பரணிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுர்சன், சாரிகன், திவிசன், சஷ்வின் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், அருணயன், துாரிகன், அப்சரன், ஹிகரி ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(CS/41515) (4.6) **தகவல்: குடும்பத்தினர்**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
## பரமநாதன் கமலாதேவி

மலர்வு 06.08.1953 — மறைவு 20.11.2020

**திதி: பூர்வயக்க ஷஷ்டி (10.12.2021)**

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்.

**குளக்கண்டி வீதி,**
**இருபாலை கிழக்கு,**
**கோப்பாய்.**

**குடும்பத்தினர்**

(cs.40948) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பன்மடங்கு...

எனவே, பொதுமக்கள் ஒன்றுகூடல்களுடன் பண்டிகைகளை கொண்டாடுவதற்கு முயற்சித்தால், 2022 ஆம் ஆண்டையும் கொரோனாப் பரவலுடனேயே கடக்க வேண்டியேற்படும் என்றும் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
எவ்வகையான சுகாதார ஆலோசனைகள் வழங்கப்பட்டாலும், எச்சரிக்கை விடுக்கப்பட்டாலும் கடந்த ஆண்டு ஏப்ரல் மற்றும் நவம்பர் மாதங்களில் ஏற்பட்ட நிலைமை மீண்டும் உருவாகும் வகையிலேயே பொதுமக்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.
தற்போதைய பண்டிகைக் காலத்தையும் மக்கள் பழைய முறைப்படியே கொண்டாடுவதற்கு முயற்சிக்கின்றனர். தற்போதும் நாம் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளோம்.
சமூகத்தில் பல பகுதிகளிலும் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். நாளாந்தம் ஊடகங்களில் வெளியிடப்படும் தரவுகளை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டு, நிலைமை மோசமடையவில்லை என்று கற்பனை செய்ய வேண்டாம் என்று எச்சரிக்கின்றோம். காரணம் அதனைவிட மோசமான நிலைமை சமூகத்தில் காணப்படுகிறது.
எனவே அரசாங்கத்தால் அல்லது சுகாதாரத் தரப்பினரால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும் விதிக்கப்படாவிட்டாலும் மக்கள் சுய கட்டுப்பாடுகளுடன் செயற்பட வேண்டும்.
அவ்வாறில்லை என்றால், பண்டிகைகளை தனிமைப்படுத்தல் நிலையங்களில் அல்லது கொரோனா சிகிச்சை நிலையங்களிலேயே கொண்டாட வேண்டியேற்படும். - என்றார். (த-இ)

### ஹெலி...

மனைவி உட்பட 13 பேர் பயணித்த ஹெலிகொப்டர், தமிழகத்தின் குன்னூர் பகுதியில் நேற்று விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த அனைவரும் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர்.
நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டனில் உள்ள இராணுவ பயிற்சிக் கல்லூரியில், நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்காக நேற்று முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் உயர் அதிகாரிகள் உட்பட 13 பேர் ஹெலிகொப்டரில் சென்றனர்.
அது குறித்த இடத்தில் தரையிறங்க 5 நிமிடங்கள் மட்டுமே இருக்கும் நிலையில், குன்னூர் அருகே காட்டேரி மலைப்பாதை மேலே சென்றுகொண்டிருந்தபோது திடீரென்று கட்டுப்பாட்டை இழந்து மதியம் 12.20 மணியளவில் மலைப்பகுதியில் வீழ்ந்து நொருங்கி விபத்துக்குள்ளாகியது என்று இந்தியச் செய்திகள் தெரிவித்தன.
ஹெலிகொப்டர் வீழ்ந்தவுடன் அருகில் செல்லமுடியாத அளவுக்கு அது தீப்பற்றி எரிந்துள்ளது.
இதில் முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் மற்றும் அவரது மனைவி உட்பட 13 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. சடலங்கள் தீயில் கருகியமையால் அடையாளம் காணமுடியாத நிலை காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.
மேலும், மரபணுப் பரிசோதனை மூலமாக உயிரிழந்தவர்களின் விவரங்களை கண்டறியும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.
இதேவேளை - முப்படைத் தளபதி பயணிக்கும் ஹெலிகொப்டர் இவ்வாறு விபத்துக்குள்ளாவது என்பது பாரதூரமான சம்பவம். இது உண்மையில் விபத்துக்குள்ளானதா? அல்லது தாக்குதல் சம்பவம் ஏதாவது நடத்தப்பட்டிருக்கலாமா என்பது பற்றி பெரும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அது தொடர்பில் இந்திய அரசு தீவிர விசாரணையில் இறங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-ச)

### பாதீடு...

ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச தலைமையிலான கூட்டணி அரசின் 2022 ஆம் நிதியாண்டுக்கான பாதீடு, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவால் நவம்பர் 12 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.
நவம்பர் 13 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிவரை 7 நாள்கள் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்று, 22 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
இதன்படி 2ஆம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆதரவாக 153 வாக்குகளும், எதிராக 73 வாக்குகளும் அளிக்கப்பட்டன.
அதன்பின்னர் நவம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை (மூன்றாம்வாசிப்பு) ஆரம்பமானது.
நாளை நிதி அமைச்சுக்கான ஒதுக்கீடு தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளது. இதன்போது பதிலளித்து உரையாற்றவுள்ள நிதி அமைச்சர், பாதீட்டில் திருத்தங்கள் செய்ய இருப்பின் அவை தொடர்பான அறிவிப்புக்களை விடுப்பார்.
அதன்பின்னர் மாலை வாக்கெடுப்பு நடத்தப்படும். ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி ஆகியன எதிராக வாக்களிக்கவுள்ளதாக தெரியவருகின்றது. அரசும் அதன் தோழமைக்கட்சிகளும் ஆதரவாக வாக்களிக்கவுள்ளன. (த-44)

### முன்னாள்....

ளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சிறு கைத்தொழில் அல்லது வங்கிக் கடன் ஊடாக தொழில் வாய்ப்பு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. அவர்கள் தற்போது வறுமையால் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். புனர்வாழ்வு பெற்ற சிலர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். பலர் கையேந்தி பிச்சையெடுக்கும் அவல நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்" - என்றார். (த-22)

### சிலிண்டர்களை...

ப்பட்ட சமையல் எரிவாயு கொள்கலன்களை மீளப் பெறவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.
இதன்படி மேற்குறித்த திகதிக்கு முன்னதாக விநியோகிக்கப்பட்ட, முத்திரை அகற்றப்படாத சமையல் எரிவாயு கொள்கலன்கள் இவ்வாறு மீளப் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன என்று நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-இ)

### மன்னாரில்...

பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தில், இந்த மாதம் இதுவரை 118 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவித்தார். (த-60)

### சிலிண்டர்...

வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
அத்தகைய வெடிப்புச் சம்பவங்கள் தொடர்கின்றபோதும், அவை சாதாரண குண்டுவெடிப்புகள் என்று விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் கூறுவது நகைப்புக்குரியது.
எரிவாயு மோசடியானது அரசாங்கத்தின் இயலாமையின் வெளிப்பாடு.
நாட்டில் நுகர்வோர் விவகார அதிகார சபை உள்ளதா என்று கேட்கவிரும்புகின்றேன். நுகர்வோரைப் பாதுகாக்க வேண்டிய நிறுவனமானது, நிறுவனங்களை பாதுகாக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.
நுகர்வோர் விவகார அமைச்சர் நிறுவன சேவைகள் அமைச்சராக மாறிவிட்டார். முழு அரசாங்கமும் கைகோர்த்து நாட்டு மக்களை ஏமாற்றி வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

### காரைநகர்...

கேதீஸ்வரதாஸ் உயிரிழந்தமையால், சபைக்கு புதிய தவிசாளராக சுயேச்சைக்குழுவைச் சேர்ந்த மயிலன் அப்புத்துரை தெரிவுசெய்யப்பட்டார்.
அவர் தலைமையிலான முதலாவது வரவு - செலவுத்திட்டம் சபையில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது.
ஈ.பி.டி.பியைச் சேர்ந்த 2 பேரும், சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த 3 பேரும் அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 3 பேரும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 2 பேரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஒருவரும் எதிராக வாக்களித்தனர்.
அதனால், மேலதிக ஒரு வாக்கால் பாதீடு தோற்கடிக்கப்பட்டது. எதிர்வரும் 21ஆம் திகதி திருத்தங்களுடன் பாதீடு சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதுவும் தோற்கடிக்கப்படும் பட்சத்தில் மறுபடியும் தவிசாளர் தெரிவு நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-319)

### விபத்தில்...

ஒருவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.
மீசாலை வடக்கைச் சேர்ந்த, கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரான கந்தசாமி சுதாஸ்கரன் (வயது - 35) என்பவரே உயிரிழந்தார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற ஆசிரியர், வீதியைக் கடப்பதற்காக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வீதியில் காத்திருந்த போது, சாவகச்சேரி பகுதியிலிருந்து வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் மோதியதில் விபத்து இடம்பெற்றது. இதன்போது, தலையின் பின்புறம் படுகாயமடைந்த நிலையில் குறித்த ஆசிரியர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் 11 நாள்களின் பின்னர் நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (த-159)

### இளம்பெண்...

தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இதே பகுதியைச் சேர்ந்த அனுஷியா (வயது - 27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். அது தொடர்பில் விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-125)

### இயக்கச்சியில்...

ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இதே பகுதியைச் சேர்ந்த சந்திரகுமார் தமிழரசன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். விசாரணை தொடர்கின்றது என்று பளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-113)

### கல் வீழ்ந்து....

உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இதே பகுதியைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் கஜிதரன் (வயது - 11) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தார்.
குறித்த வீட்டில் கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன. அங்கு விளையாடிக் கொண்டிருந்தவேளை, சிறுவன் மீது கல் வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
உடனடியாகவே அந்தச் சிறுவனை மீட்டு மூளாய் மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதும் அங்கு சேர்ப்பதற்கு முன்னரே சிறுவன் உயிரிழந்துவிட்டார் என்பது பரிசோதன்னயில் தெரியவந்தது.
உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-319)

*மட்டக்களப்பில்*

## இறந்தவர்களை நினைவுகூர்ந்த 10 பேரும் பிணையில்விடுவிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 9
மட்டக்களப்பு மாவட்டத்தில், உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்ந்தமைக்காக கைதுசெய்யப்பட்ட 10 பேரும் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
கடந்த மே மாதம் 18ஆம் திகதி உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்ந்தனர் என்றுகுற்றம்சாட்டி மட்டக்களப்பைச் சேர்ந்த 10 பேரை பொலிஸார் கைதுசெய்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தனர்.
உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்வதை எந்தச் சட்டத்தாலும் தடுக்க முடியாது என அவர்கள் சார்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணிகள் மன்றில் சுட்டிக்காட்டியிருந்தனர்.
இந்தநிலையில், மன்று அவர்களை பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கியது.
குறித்த 10 பேர் சார்பிலும், தன்னுடன் மூத்த சட்டத்தரணி ரட்ணவேல், மற்றும் சட்டத்தரணிகளான ஜெசிங்கம், ரம்சி, றிப்கான் ஆகியோரும் பங்களித்திருந்தனர் என்று சட்டத்தரணி கே.சுகாஷ் தெரிவித்தார். (த-20)

# திருஞானசம்பந்தபிள்ளை

## சைவத்துக்கும் – தமிழுக்கும் தொண்டாற்றிய மகான்

வெற்றிவேல் சக்திவேல்

*சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்களாகக் கொண்டு.அரும் பெரும் பணிபுரிந்த மு. திருஞானசம்பந்த பிள்ளை இவ்வுலக வாழ்வை நீத்து ஓராண்டு நிறைவடைகின்றமையை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமா கின்றது.*



நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனும் கொண்டு நடமாடும் நூலகமாக, அறிவுப் பெட்டகமாக சைவத் தமிழ் அறிவின் ஆழ அகலங்களை அறிந்த, இலக்கிய முதுசொமாகத் திகழ்ந்த, யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை வருகைநிலை விரிவுரையாளர் சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தனது இறுதி மூச்சுவரை தமிழ் இலக்கிய உலகோடு இணைந்து செயற்பட்டவர் என்றால் அது மிகையாகாது.

கருவிலே திருவுடையோராக வேலணைக் கிராமத்தில் 1938ஆம் ஆண்டு டிசெம்பர் 25ஆம் திகதி பிறந்து, நாவலர் வழிவந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் மாணாக்கரான பண்டிதை வேதநாயகி, சிவஞானசம்பந்தர் ஆகியோரிடம் கல்வி கற்றார். அத்துடன் வேலணை மத்திய கல்லூரியில் கல்விகற்று சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் முதன்மைச் சித்தியடைந்து, 1957-1958 காலப்பகுதியில் பலாலி ஆசிரியர் கலாசாலையில் தமிழ்மொழி சிறப்பு ஆசிரியப் பயிற்சியைப் பெற்றதுடன் சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் பட்டங்களைப்பெற்று, வளமிகு தமிழ்ச் சொத்தாகத் திகழ்ந்தார்.

சைவப்புலவர் தேர்வில் முதன்மைச் சித்திபெற்று, தங்கப் பதக்கத்தை வென்றதுடன் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் சைவப் புலவர் வகுப்புகளையும், சைவப்புலவர் பரீட்சைகளையும் நடத்தினார்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை, சிவதொண்டன் நிலையம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆகியவற்றிலும் சைவ சித்தாந்த வகுப்புக்களை நடத்தியதுடன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் இதர ஊடகங்களிலும் சைவசமயச் சிந்தனைகளை விரித்துரைத்தார். கலைஞானச்சுடர், சமய சமூக ஒப்புரவாளர் என்ற மதிப்புறுப் பட்டங்களைப்பெற்றதுடன், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் சைவசித்தாந்த முதுகலை மாணி வருகைநிலை விரிவுரையாள ராகவும் பணியாற்றினார்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் இணுவில், கொழும்பு மையங்களில் சைவ சித்தாந்த விரிவுரைகளை தெளிவாக நிகழ்த்தினார். இலங்கை கம்பன் கழகம் இவரது சேவையைக் கௌரவித்து, "நாவலர்" விருதை அளித்தது.

சைவபரிபாலனசபை ஆரம்பித்து, பூதந்தேவனார் தமிழ்புலவர் கழகம், அகில இலங்கை சைவப்புலவர் கழகம் ஆகியவற்றின் தலைவராகவும் சைவநெறி தொண்டர் கழகம், ஓய்வுநிலை அதிபர் சங்கம், யாழ். மாவட்ட இந்து சமய அபிவிருத்திச் சபை, அகில இலங்கை திருமுறைமன்றம், சைவபரிபாலன சபை, அகில இலங்கை சைவப்புலவர் கங்கம் ஆகியவற்றின் செயலாளராகவும் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், அரியாலை ஶ்ரீபார்வதி வித்தியாசாலை, யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை, இணுவில் மத்திய கல்லூரி ஆகியவற்றின் அதிபராகவும் நல்லூர் கல்விக் கொத்தணி, உடுவில் கல்விக் கொத்தணி பிரதிப்பணிப்பாளராகவும் திகழ்ந்தார்.

அவர் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி இந்த உலக வாழ்விலிருந்து விடைபெற்றாலும், அறிவுக்கூர்மையும் தமிழுணர்வும் குன்றாது புதிது புதிதாக தீந்தமிழ்ச் சுவையை சுவைக்க வைத்த அமுதமாகத் திகழ்ந்த பெருந்தகை என்றும் நீங்காத ஒளியாக நிலைத்திருப்பார்.

## வெளிநாடு செல்வோர் எண்ணிக்கை 100,000+

இந்த வருடத்தில் பதிவு செய்து, வெளிநாடு செல்லும் பணியாளர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைக் கடந்துள்ளது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சராசரியாக, ஒவ்வொருவருடமும் 2 இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். எனினும், கடந்த வருடம் கொரோனாத் தொற்று நிலைமையால் இந்த எண்ணிக்கை 53 ஆயிரமாகக் குறைவடைந்திருந்தது- என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது (ஒ-4)


## நிரந்தர வேலை வாய்ப்பு

பிரபலமான காப்புறுதி நிறுவனத்தில் நிரந்தரமான வேலைக்கு பதவி வெற்றிடம் உள்ளமையால் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.



**வெற்றிடங்கள்**

- **Wealth Planner**
  **தகைமை :** க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தி
- **Wealth Planner Manager**
  **தகைமை :**
  - க.பொ.த. உயர்தரத்தில் சித்தி.
  - ஏதாவது ஒரு துறையில் ஒரு வருட வேலை அனுபவம்.

ஆவர்வம் உள்ளவர்கள் தங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை **076 523 1730** என்ற இலக்கத்திற்கு SMS ஊடாக அனுப்பி வைக்கவும்.

(CS 41524) (3/6)

### அலுவலக சூழல் பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகம் ஒன்றின் சுற்றுப்புற சூழலை பராமரிக்க ஆண் பணியாளர் தேவை.
வயது (50 - 65)

**071 034 5949**

(cs 41523) (2.6)

### உடனடி வேலை வாய்ப்பு

யாழ்நகர் மத்தியில் அமைந்துள்ள **சன்றைஸ் மெடி கிளினிக்** இற்கு

1. Ambulance Driver (Day & Night)
2. துப்பரவுத் தொழிலாளர் (ஆண் / பெண்) தேவை.

**076 255 5529 , 077 337 4595**

(cs 804) (2.6)

### வீடு வாடகைக்கு

திருநெல்வேலி தபால்பெட்டி சந்தியில் 2 படுக்கை அறை. நவீன குளியல் அறை. Hall- Kitchen (Open Plan) பல்கலைக்கழக ஊழியர் / மாணவர்க்கு உகந்தது.

**077 989 1597** (CS 41519)(4.6)

### காணி விற்பனைக்கு

கோப்பாய் - உரும்பிராய் பிரதான வீதியில் இருந்து 500M தூரத்தில் 4 1/2 பரப்பு காணி விற்பனைக்கு. 1 1/2 பரப்பாக பிரித்து வழங்கப்படும். (உரும்பிராய் கிருஸ்ணன் கோவில் சந்தி அருகாமை)

**077 6585 999, 077 911 6983**

(CS 807) 1-6

### காணி விற்பனைக்கு

யாழ் சுன்னாகம் நகரத்தின் மத்தியில் K.K.S வீதியில் இருந்து 200M தூரத்தில் (இலங்கை வங்கி முன் வீதியில்)
14 பரப்புக் காணி விற்பனைக்கு.
1 1/2 பரப்பாக பிரித்து வழங்கப்படும்.

தொடர்பு: **076 8909 259, 077 0150 353**

(CS 806) 1-6

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை பகுதியில் கணக்கர் வளவு 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 m தூரம்.
பார்வையிடும் நேரம்: காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை
(தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 81 47 389, 077 61 47 333**

(CS 41521) 1-6

### மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 07 . 1946



மறைவு
07 . 12 . 2021

**திருமதி பாக்கியராசா நாகபூஷணி -சீதா (ஆசிரியை)**

96, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், இல.859/06 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பாக்கியராசா நாகபூஷணி கடந்த (07.12.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னுத்துரை ரேவதிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி நவரத்தினம் தனபாக்கியம் (காரைநகர் மல்லிகை) தம்பதிகளின் அன்பு மருமகளும், பாக்கியராசாவின் பாசமிகு மனைவியும், கோபிராஜ், பத்மஜா, கோபிரஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அச்சுதா, சம்பந்தன், கிருஷாந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பதுமன், மகரிஷி, ஆதிரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2021) வியாழக்கிழமை ந.ப 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புக்கு:0779967140 (மகன்)**

**தகவல் : கணவர், பிள்ளைகள்.**

(CS 808)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.